Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 10 செவ்வாய்க்கிழமை (27.09.2011) பக்கங்கள் 16 ஓசை - 363


சமத்துவமான நல்லாட்சிக்கு.... 04


கூட்டணியின் விருப்பம் 09


இப்படியும் ஒரு போட்டி 11


திருப்பி அழைக்கப் பட்டார் 13

## விரைவான அரசியல் தீர்வு வலியுறுத்துகிறது இந்தியா

(வொஷிங்டன்)

இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்பிற்கு அண்மித்த வகையில் விரைவான அரசியல் தீர்வொன்றை அரசாங்கம் காணவேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது. அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சி யில் சர்வதேச நாணயநிதியம், மற்றும் உலக வங்கி ஆகிய வற்றின் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்திய நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்கு, நீதி, சமாதானம், சுயகௌரவம் என்பவற்றுக்காகவே விரைவான அரசியல் தீர்வை இலங்கை அரசு முன்வைக்கவேண்டுமெனவும், இவ்வாறு முன் வைக்கப்படும் தீர்வு தமிழர்களின் எதிர்பார்ப்பிற்கு அண்மித்த வகையில் இருக்க வேண்டுமெனவும் முகர்ஜி வலியுறுத்தியுள்ள தாகவும், இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்படுத்தப்படவுள்ள அரசியல் தீர்வு நீடித்து நிலைத்திருக்கும் வகையில் அரசாங்கம், தமிழ்க்கட்சிகளுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதாக இதன்போது அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். அத்துடன் இந்திய நிதியு தவியுடன் அமுல்ப்படுத்தப்படும் ஐம்பதாயிரம் வீட்டுத்திட்டத்தின் முன்னோடியாக ஆயிரம் வீடுகள் நிர்மானிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர், மிகுதி வீடுகளைக் கட்டுவதற்கான நிதியை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவிற்கும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இற்கும் இடையி லான சந்திப்பின்போது அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் மற்றும் நாடாளு மன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், வெளிவிவ கார அமைச்சர் பீரிஸ் விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியாவில் குடும்பஸ்தர் கொலை

வவுனியா ஓயார் சின்னக் குளத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம் பவம் ஒன்று நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இடம பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இரும்பு வியாபாரியும் 3 பிள்ளைகளின் தந்தையுமான யோகானந்தன் கமல்ராஜ் (வயது - 40) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இரு குழுக்களிடையே இடம பெற்ற மோதலே இந்தச் சம்ப வத்திற்குக் காரணம் என தெரிவிக கப்படுகிறது. எனினும் இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர் புடைய 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் மேலும் சில சந்தேக நபர்கள் தப்பியோடி விட்ட தாகவும் அவர்களைக் கைது செய வதற்கான முயற்சியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும அத்துடன் சம்பவம் குறித்த விசார ணைகளும் இடம்பெற்றுவருவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது.(125)

## அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி பயணத்திட்டத்தை மாற்றவில்லை

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நியூயோர்க் சென்றுள்ள ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ தனது பயணத்திட்டத்தை மாற்றியமைக் கவில்லை என இலங்கை வெளி விவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நியூயோர்க நீதிமன்றத்தில் கேணல் ரமே ஷின் துணைவி வத்சலாதேவி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவசரமாக கொழு ம்பு திரும்புவார் என விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நம்பிய தாகவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. இதேவேளை விடு தலைப் புலிகள் மற்றும் அவர்க ளின் ஆதரவாளர்கள் முன்வைக் கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக ளைக் கண்டு ஓடிவிடப்போவ தில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமெரிக்க நீதிமன்றத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ள நிலையிலேயே, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ மேற்கண்டவாறு கூறியதாக இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.


(15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் அபிலாசையை பூர்த்தி செய்யும் தீர்வுத் திட்டம் அமைய வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில், தமிழ் மக்களின் அபிலாஷை களைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் அமையவேண்டு மென ஹிந்து பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.ராம் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற இந்திய - இலங்கை சமூகக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கை மற்றும் பௌதீக ஒரு மைப பாடு ஆகிய கோட்பாடு களுக்கு முன்னுரிமை அளிக்கக் கூடிய வகை யில் தீர்வுத்திட்டம் அமை யவேண்டும். புறச் சக்திக



ளினால் திணிக்கப்படும் தீர்வுத் திட்டமொன்று எமக்கு

(15 ஆம் பக்கம் பார்க்க)

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது கிளாலி மீள் குடியேற்றம்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி, கிளாலிப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற விருந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இப்பிரதேசத்தில் முழுமை யாகக் கண்ணிவெடி அகற்றப்படாத காரணத்தால் நிறுத்தப்பட்ட தாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ் வரன் அறிவித்தார்.

இம் மீள்குடியேற்றம் கிளாலி - எழுதுமட்டுவாள் பிரதான வீதியின் மேற்குப்பகுதியிலேயே இடம்பெற இருந்தது. ஆனாலும் மற்றய பகுதியில் கண்ணிவெடி அகற்றப்படாமையால் குறிப்பிட்ட மீள்குடியேற்றம் பாதுகாப்பற்றதாக இருக்கும் என்ற காரணத்தா லேயே நிறுத்தப்பட்டது. மேலும் மீளக்குடியமர்தல் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்

### சவேந்திர சில்வா கோரிக்கை

விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதிகளான ரமேஷ் மற்றும் சூசையின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ரமேஷின் மனைவியும் சூசையின் சகோதரியுமான வத்சலா நட்ட ஈடு வழங்கவேண்டுமென ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந் தர பிரதிநிதியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.



மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக ரமேஷின் மனைவி வத்சலா அமெரிக்காவின நியூயோர்க் நீதிமன்றில் தொடு த்த வழக்குத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அமெரிக்க நீதிமன்றில் இந்த வழக்கு புலிக ளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி ரமேஷின் மனைவி வத்சலாவினால் தொடுக்கப்பட்டுள்ளது. இந்த பயங்கரவாதிகள் எவ் வாறு தமக்கு வெள்ளையடித்துக் கொள்கிறார்கள் என்பதை அமெரிக காவில் வாழும் மக்கள் அறிந்துகொள்வதற்கு இது நல்ல வாய்ப்பாகும்.

இது புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு நிதி திரட்டுவதற் கான இன்னொரு வழியாக இருக்கலாம். எங்கு வேண்டுமானாலும் எனது நாட்டினதும் அப்பாவி பொதுமக்களை புலிகளின் பிடியிலி ருந்து விடுவிப்பதற்காகப் புலிகளைத் தோற்கடிக்கப் போராடிய எனது படையினரதும் கௌரவத்தை பாதுகாப்பதற்கு நான் தயாராக வுள்ளேன். எனக்கு கிடைத்த தகவல்களின்படி அவர் (வத்சலா) யுத்தத்தின் கடைசி நாட்களில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர்குழு குறித்து அளித்த வாக்குறுதியை ஐ.நா.செயலர் பேணத் தவறிவிட்டார்

### ஜனாதிபதி மகிந்த விசனம்

(கொழும்பு)

வடக்கில் மேற்கொள்ளப் பட்டுவரும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், மீள்குடியேற்ற நடவடிக்கைகள் உட்பட யுத்தத் தின் பின் இலங்கையில் மேற் கொள்ளப்பட்டுவரும் அபிவிருத் திகள் குறித்து ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு விளக் கமளித்துள்ளார். கடந்த சனிக் கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனை ஜனாதிபதி சந்தித்து கலந்துரை யாடும்போதே அவர் இது தொடர்பில் விளக்க மளித்துள் ளார். அதேவேளை ஐ.நா. நிபுணர குழு தொடர்பில் அளிக்கப்பட்ட வாக்குறுதி பேணப்படவில்லை



எனவும் ஜனாதிபதி தெரிவித்து ள்ளார். தமிழ் அரசியல் கட்சிகளு டனான பேச்சுவார்த்தை உட்பட நல்லிணக்க செயன்முறைகளை

(15 ஆம் பக்கம் பார்க்க)

# இரும்புக் கம்பிகளைக் கடத்திய வைத்தியசாலை ஊழியர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் வளாகத்திலிருந்து இரும்புக் கம்பிகளைக் கடத்திய வைத்தியசாலை ஊழியர் உட்பட இருவர் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கைதுசெய்யப்பட்டு யாழ். நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.50 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக வைத்திய சாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரால் யாழ். பொலிஸாருக்கு கொடுக்கப்பட்ட தகவலையடுத்தே ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் இத்திருட்டு முயற்சியை முறியடித்ததுடன், யாழ். போதனா வைத்தியசாலை ஊழியரான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஏ.ஜி.சோமரட்ண மற்றும் ஓட்டோ உரிமையாளர் எம்.சிவாகரன் ஆகயோரைக் கைதுசெய்ததுடன், கடத்தப்பட்ட இரும்புக் கம்பிகளுடன் ஓட்டோவும் கைப்பற்றப்பட்டு யாழ். நீதி மன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



யாழ். போதனா வைத்திய சாலையில் ஜப்பான் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் நான்கு மாடிக் கட்டடத்தின் தூண்களுக்கு பயன்படுத்தப்படும் உருக்குக் கம்பித்துண்டுகளே இவ்வாறு கடத்தப்படவிருந்ததாக மேலும் தெரியவருகின்றது.

(பா,எஸ்)

# ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் நிலவும் கணித, விஞ்ஞான மற்றும் ஆங்கில ஆசிரியர்களின் வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது.

மேற்படி பாடநெறிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையிலான நேர்முகத் தேர்வு நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றவுள்ள ஆசிரியர்கள் குறித்த நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கும்போது தேசிய அடையாள அட்டை, அது இல்லாதவிடத்து புகைப்படத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள், பிறப்புச் சான்றிதழ் (பெயரில் வித்தியாசம் இருப்பின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தல் வேண்டும்) க.பொ.த சாதாரணதர, உயர்தர சான்றிதழ், பட்டச்சான்றிதழ் (கணித, விஞ்ஞான பாடங்களுக்கு மட்டும்) வேறு விசேட தகைமைகள் இருப்பின் அவை தொடர்பான சான்றிதழ் ஆகியவற்றை எடுத்து வருவதுடன் கோவைப்படுத்துவதற்கு பிரதிகளும் ஒப்படைக்கப்படல் வேண்டுமென வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

# ஆசிரியர்களுக்கான சேவைகள் அவசர கலந்துரையாடல்

வடமாகாணத்திற்குட்பட்ட வலயக் கல்வி அலுவலக முறைமை சார்ந்த ஆசிரியர்களுக்கு வழங்கும் சேவைகளை வினைத்திறன் மிக்கதாக்குதல் மற்றும் உலக ஆசிரிய தினம் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு வட மாகாண கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாகம், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

# பரிசளிப்பு விழா

(புத்தூர்)

யாழ். புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் Ur. Friend Foundation தலைவர் க.செவ்வேள் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி வே.பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும், பாடசாலை பழைய மாணவரும், சர்வோதய நிறுவன திட்டமிடல் அலுவலருமான சி.இதயதீபன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் இப்பரிசளிப்பு விழாவுக்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எப்.எஸ்)

# சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்கு

(அச்சுவேலி)

இவ்வருடம் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நன்மைகருதி ஊவா வெலிசற பல்கலைக்கழக மாணவர்களினால் விசேட கல்விக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளது.

நாளை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான விசேட மீட்டல் வகுப்புகள் இடம்பெறவுள்ளது. இக்கருத்தரங்கானது கோப்பாய் கோட்டத்தில் பின்வரும் ஒழுங்கமைப்பிற்கமைய இடம்பெறவுள்ளது.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் - அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளுக்கும், அச்சுவேலி புனித தெரேசாள் கல்லூரியில் - அச்சுவேலி புனித தெரேசாள் கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும், ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயத்தில் - ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் - சோமாஸ்கந்தக் கல்லூரி, ஆவரங்கால் விஷ்ணு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக கும், அத்தியார் இந்துக் கல்லூரியில் - அத்தியார் இந்துக் கல்லூரி, ஊரெழு சைவப் பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும், உரும்பிராய் இந்துக் கல்லூரியில் - ஊரெழு கணேசா வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய் மகா வித்தியாலயம், கோப்பாய் சரவணபவானந்த ஆகிய பாடசாலைகளுக்கும் இடம்பெறவுள்ளன. (03)

# மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று மதியம் 12.00 மணிக்கு கலட்டி மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே நல்லூர் கோட்ட அதிபர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா அறிவித்துள்ளார். (எஸ்)

# கற்கள் பறிப்பு

கந்தரோடையிலிருந்து அளவெட்டிப் பகுதிக்குச் செல்லும் வயல்வெளி வீதியின் ஒரு பகுதியை திருத்தம் செய்யும் வகையில் வலி.வடக்கு பிரதேச சபையினால் கற்கள் பறிக்கப்பட்டு வருகின்றது.

# அரியாலைப் பகுதியில் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

அரியாலை இலந்தைக்குளம் பகுதியில் நேற்று முற்பகல் இனந்தெரியாத 6 பேரால் சுற்றி வளைக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டிற்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஏ.சியோன் (வயது 36) என்ற கொழும்புத்துறையைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளியே படுகாயமடைந்தவராவார்.

அண்மையில் கொழும்புத் துறைப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலின் பின்னணியில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் காரணமாக தமக்கு எதிரானவர்கள் கூலிக்கு ஆட்களை அமர்த்தி இச்சம்பவத்தைப் புரிந்திருக்கலாம் என்று தெரிவித்த அம் மீன்பிடித் தொழிலாளி தாம் வெட்டுக்காயத்துடன் தப்பியோடியிருக்காவிட்டால் தனது நிலை வேறு விதமாக இருந்திருக்கும் எனவும் குறிப்பிட்டார். (பா,21)



யாழ். பல்கலைக்கழக பாலசிங்கம் ஆண்கள் விடுதியில் நேற்று மாலை மாணவர்களுக்கான உடற்பயிற்சிக்கூடம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார், தமிழ்த்துறை தலைவரும் விடுதிக் காப்பாளருமான கி.விசாகரூபன், பிரதம ஒழுக்காற்று அதிகாரி ஐ.கோ.சந்திரசேகரம் ஆகியோர் இணைந்து உடற்பயிற்சிக்கூடத்தை திறந்து வைப்பதையும், விடுதி மாணவர்கள் உடற்பயிற்சியை மேற்கொள்வதையும் காணலாம். (பா.சிகான்)


தபால் மூலம் ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month SEPTEMBER 2011 - FEBRUARY 2012

20 வருட அனுபவம்

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| ☐ கல்முனை | ☐ புத்தளம் | ☐ யாழ்ப்பாணம் | ☐ ஹட்டன் |
| ☐ மட்டக்களப்பு | ☐ வவுனியா | ☐ கண்டி | ☐ அனுராதபுரம் |
| ☐ திருகோணமலை | ☐ மன்னார் | ☐ கொழும்பு | ☐ நுவரெலியா |

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றைக் கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு sms செய்து பெற்றுக்கொள்ளலாம். mobile : 0777140844, 0718034848

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co - ordinator
MARUTHUR A.HASSEN (B.Sc psychology, M.Sc psychology,

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07
web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத்திகதி: 28.09.2011

(C/932)

உலகின் ஒவ்வொருவருக்கும் கடமை உண்டு. அதை மறந்து தனித்து ஒதுங்கி தாம் மட்டுமே இறைவனை அடைய வேண்டுமென முற்படுவோர் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்கின்றனர்.

-தாசவர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# மக்களைக் காக்கும் சவால்!

ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி தனது மகாநாட்டை நடத்தி முடித்திருக்கிறது. கூட்டமைப்பில் இருந்துகொண்டே கூட்டமைப்புக்கு சவால் விடும் சங்கரியாரின் மற்றொரு முயற்சியாகவே இதைக் கருத முடிகிறது. வடக்கு கிழக்கின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து முன்னாள் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் பேராளர்களாக வந்து கலந்து கொண்டுள்ளனர்.

அதுமட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளிருந்து, அதைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்துகொண்டுவிட வேண்டும் என்று பெரு முயற்சி செய்யும் பிரிவினரும் உற்சாகத்துடன் சங்கரியாரின் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். அங்கு உரையாற்றிய அவர்களில் சிலர், கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டியதை வலியுறுத்தி, ஆனந்த சங்கரி அதற்குத் தலைமை தாங்கவேண்டும் என்றும் பேசியுள்ளனர்.

இது, கூட்டமைப்பைத் தமிழரசுக் கட்சியின் பிடியில் வைத்திருக்க வேண்டும் என்று விரும்பி ரி.என்.ஏ தனிக் கட்சியாகுவதை விரும்பாத பிரிவினருக்கான அடியாகவே கொள்ள வேண்டும். ரி.என்.ஏ யைக் கட்சியாக்க ஒத்துழைக்காவிட்டால், கூட்டமைப்பின் கணிசமான எம்.பிக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போய் இணைந்து கொள்வதன் மூலம் அதுவே தமிழ்த் தேசியர்களின் பிரதான கட்சி என்று காட்டும் முயற்சியில் இறங்க நேரிடும் என்ற எச்சரிக்கையையே அவர்கள் விடுக்க விரும்பியிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் அவர்களுக்கு இதிலுள்ள சிக்கல் சங்கரியாரின் கொள்கை நிலைப்பாடு ஆகும். இந்தியாவின் மாநில அதிகாரங்கள் மாதிரியிலமைந்த ஓர் அதிகாரப் பகிர்வையே அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார். இந்தத் தீவில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே நீண்டகால உறவும் வாழ்வுத் தொடர்பும் இருப்பதாகக் கூறுகிறார். அவர்களுடன் இணைந்து வாழும் பன்மைத்துவ சமுதாயம் அதற்கான சாத்தியபூர்வ தீர்வு பற்றிப் பேசுகிறார்.

அதையெல்லாம் விட இன்னும் யதார்த்தமாக, அரசுடன் பேசும்போது டயஸ்போராக்கள் மற்றும் தனிநாட்டுக் கனவில் இருப்போரைத் திருப்திப்படுத்தும் வகையில் பேசிக்கொண்டிருக்க முடியாது என்பதை வெளிப்படுத்துகிறார். சம்பந்தன் குழுவினர் அரசுடன் பேசும் விடயங்களை மூடு மந்திரமாக வைத்திருப்பதற்கு அதுதான் காரணம் என்று அம்பலப்படுத்துகிறார்.

தனிநாடு, சமஷ்டி, சுயநிர்ணயம் என்றெல்லாம் சொற்களை ஜல்லியடித்துக் கொண்டிராமல், சாத்தியமான விடயங்களையே பேச்சுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி நடைமுறைக்குச் சாத்தியமானவை பற்றிச் சம்பந்தன் குழுவினர் பேசுவது தெரிந்தாலே டயஸ்போராவும், மக்களை மாயைகளில் வைத்திருக்க இவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஊடகங்களும் இவர்களுக்கு எதிராகத் திரும்பிவிடுவர் என்கிற புலிவாலைப் பிடித்தவர்களின் நிலைமையில் இருக்கிறார்கள்.

ஆகவே, புலம்பெயர் காசையும், மீண்டும் எம்.பி பதவிகளைக் குறிவைத்து வளர்க்கப்பட்டிருக்கும் மக்கள் ஆவேச உணர்ச்சிகளையும் மீறி சங்கரியாரின் கோட்டுக்குள் அவர்கள் வந்துவிடவும் முடியாது. புதுடெல்லிக் கூட்டத்திலும் கூட, மேற்கண்ட தனிநாடு, சமஷ்டி, சுயநிர்ணயம் என்று இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பயங்காட்டாமல், இந்தியாவும் அங்கீகரிக்கக் கூடிய கோரிக்கைகளையே ஒன்றுபட்டு வைக்க வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்த கூட்டமைப்பு உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்பைக் காதில் வாங்கியதும் சங்கரியாருடன் சண்டைக்கு வரிந்துகட்டிய நாடகம், அவர்கள் என்னமாதிரியொரு வங்குரோத்து அரசியல் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு முன்னுதாரணம்.

மக்களை பகைவெறுப்பு உணர்ச்சிகர நிலையில் வைத்திருந்து தேர்தலுக்குத் தேர்தல் வாக்கு வேட்டையாடிக் கொண்டிருக்கவும், அதற்கு நடைமுறைக்கொவ்வாக் கனவுகளில் இருக்கும் புலம்பெயர் ஆதரவையும் பணத்தையும் எதிர்பார்த்துமிருக்கும் சுயநல முதன்மை அரசியலாளர்களால் ஒருபோதும் மக்களை வாழவைக்கக் கூடிய யதார்த்தத்திற்கு வரவோ ஏற்றுக்கொள்ளவோ இயலாது. ஏமாற்று அரசியலையே அவர்கள் தொடர்வர்.

நடைமுறைச் சாத்தியமான தீர்வொன்றுக்காகப் பேசுவதன் மூலமே இந்தத் தீவில் வாழும் மக்கள் நிம்மதியாகவும் சமாதானமாகவும் சம உரிமைகளுடனும் சம வாய்ப்புகளுடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்குரிய சூழலை நோக்கி நகர முடியும் என்று நம்புபவர்களே ஒன்று சேர்ந்து இங்குள்ள மக்களைக் காக்க முடியும்.

**– ஆசிரியர்.**

# தமிழ் மக்களை அரசியல் அந்தரத்தில் மனோகணேசன் விட்டுவிடக்கூடாது

## கூறுகிறார் ஐ.தே.க.வேட்பாளர்

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உணர்ச்சிவசப்பட்டு பொறுப்பற்ற முறையில் நடந்து, தலைநகரத்தில் தமிழ் பேசும் மக்களை அரசியல் அந்தகாரத்தில் விட்டு விடக்கூடாது என கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க.வின் சார்பில் தன்மை வேட்பாளராகப் போட்டியிடும் ஏ.ஜே.எம். ஸம்மில் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு, வெள்ளவத்தையில் தமிழ்ப் பிரஜைகளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கும் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஸம்மில் இதனைத் தெவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு,

மிக முக்கியமான காலகட்டத்தில் கொழும்பில் இந்தத் தேர்தல் நடைபெறுகின்றது. இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அல்லாத பிற கட்சிகளுக்கு விழும் வாக்குகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பேரினவாத நிர்வாகத்தைக் கொழும்பு மாநகர சபைக்கும் விரிவுபடுத்தவே உதவும் என்பதை சிறுபான்மை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்தகைய நிலைக்குத் துணை போவது தலைநகரில் சிறுபான்மையினரின் இருப்புக்கே சாவுமணி அடிப்பது போன்றதாகும். இதனைத் தமிழ்ப் பேசும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். காலங்காலமாக சிறுபான்மை மக்கள் தலைநரிகல் ஐ.தே. கட்சியையே ஆதரித்து வந்திருக்கின்றார்கள். ஐ.தே. கட்சியே தமிழ் மக்களின் காவலனாகக் கொழும்பில் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இந்தத் தேர்தலில் வெறும் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல் அரசியல் தீர்க்கதரிசனம், தூரநோக்கு ஆகியவற்றுடன் செயற்படுமாறு மனோ கணேசனை நான் கோருகின்றேன். அவரை நேரில் சந்தித்து சில விடயங்களை அவருக்குக் கூறியிருந்தேன். கடந்த பொதுத் தேர்தலின்போது அவர் சில முடிவுகளை எடுப்பதில் தவறிழைத்துவிட்டார் என்பதை அவருக்கு நான் சுட்டிக்காட்டினேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# காங்கேசன்துறை தொழிற்சாலையில் முதலிடுமாறு தனியாருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழில்சாலையை மீள ஆரம்பிக்கும் பொருட்டு அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கத் தனியார் துறையினதும் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான செயற்பாடுகள் அடுத்த வருடமளவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.எனினும் அதற்கான வளங்கள் மற்றும் முதலீடுகளை அரசு தற்சமயம் திரட்டுவதற்கு ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை தொழிற்சாலை தொடர்பான நடவடிக்கைகளையும் அதன் இருப்பு தொடர்பான தகவல்களையும் திரட்ட ஆரம்பித்துள்ளது.

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன தலைவரான சிசிர பரணகம காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம் இப்போது சீமெந்துகளை உற்பத்தி செய்ய கூடிய நிலையில் காணப்படுகிறது என சுருக்கமாக கூறினார். காங்கேசன்துறைமுக சீமெந்துக் கூட்டுத்தாபனம் 1990 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. இது 36,260 மெட்ரிக் தொன் சாதாரண சீமெந்துகளை உற்பத்திகளை காங்கேசன் என்ற குறி பெயருடன் உற்பத்தி செய்து சந்தையில் சாதாரண விலையில் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து இந்தியாவின் தூத்துக்குடிக்கு சேவையில் ஈடுப்பட்டு வந்த ஸ்கோஷியா பிரின்ஸ் பயணிகள் கப்பல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது வர்தக கப்பல் பணிப்பாளர் ஷாந்த வீரகோண் எமது செய்தி பிரிவுக்கு இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்த கப்பலில் இயந்திர அறையில் ஏற்ப்பட்ட தீ பரவல் காரணமாகவே, இந்த கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய - இலங்கைக்கு இடையிலாக இந்த பயணிகள் கப்பல் சேவையானது, 30 வருடங்களின் பின்னர் இந்த வருடம் ஜூன் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையில், குறித்த கப்பல் சேவையை மீள ஆரம்பிக்க விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஷாந்த வீரகோண் குறிப்பிட்டார்.

# நீதிமன்ற பிரிவுகளில் திறப்பு விழா

(வவுனியா)

வவுனியா கிளிநொச்சி மாவட்டங்களில் புதிய நீதிமன்றப் பிரிவுகளின் திறப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடை பெறவுள்ளது. இதில் அன்றைய தினம் காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதியும், பிற்பகல் 2 மணியளவில் குடியியல் மேன் முறையீட்டு நீதிமன்றமும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த நீதிமன்றப் பிரிவுகளைத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நீதிமன்ற விரிவாக்கல் மூலம் வழக்குகள் குறையும் எனவும், மக்களின் சிரமங்கள் தீரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (125)

# பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை சோதனை செய்ய நடவடிக்கை

பதிவு செய்யப்படாத நிலையில் இயங்கும் சிறுவர் இல்லங்கள் 65 நாடுபூராகவும் இயங்கி வருவதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இவ்வாறான சிறுவர் இல்லங்களை சோதனை செய்யும் நடவடிக்கைகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ச கரலியத்த தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சிறுவர் இல்லங்களை நடத்துபவர்கள் அதனை பதிவு செய்து கொள்ளுமாறு பலமுறை அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த போதிலும், உரியவர்கள் இதுவரையிலும் அதற்கு ஏற்ற வகையில் செயற்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# தனியார் வகுப்புகளுக்குத் தடை

ஞாயிறு மற்றும் பௌர்ணமி தினங்களில் தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு தடைவிதிக்க, மாகாணங்களின் சகல முதலமைச்சர்களும் இணங்கியுள்ளனர்.

எம்பிலிபிட்டியவில் கடந்த தினத்தில் இடம்பெற்ற மாகாண முதலமைச்சர்களது கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பான சட்டமூலங்கள் எதிர்வரும் தினங்களில் நிறைவேற்றப்படவுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக தெரிவித்தார்.

# கல்விச் சுற்றுலா

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கான விஞ்ஞான கல்விச் சுற்றுலா ஒன்று அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.

கல்வியமைச்சின் அனுசரணையுடன் யாழ்.வலய விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இச்சுற்றுலாவில் பங்குபற்றவுள்ள பாடசாலை மாணவர்களின் விபரங்கள் பாடசாலை அதிபர்களினால் விஞ்ஞான பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இக்கல்விச் சுற்றுலா 2 முதல் 3 நாட்கள் கொண்டதாக அமையவுள்ள அதேவேளை, கோன்மண்டலம், மிருகக்காட்சிச்சாலை உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

# நாட்டின் சமத்துவமான நல்லாட்சிக்கு நடுநிலையான சட்ட அமைப்பு அவசியம்

## நினைவுப் பேருரையில் வவுனியா வளாக முதல்வர்



(தெல்லிப்பளை)

ஒரு நாட்டில் நல்லாட்சி நடைபெற வேணடுமானால் எல்லோருக்கும் சமமான ஒரு நிலையான சட்ட அமைப்பு அவசியமானது. அதனை எந்தப் பாகுபாடுமின்றி நடைமுறைப்படுத்தப்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். மனித உரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டிற்குச் சுதந்திரமான நீதித்துறையும், ஊழலுமற்ற காவல் துறையும் அவசியமானது என யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் இ. நந்தகுமார் தெரிவித்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற முன்னாள் அதிபர் வைகர் வி. சிவசுப்பிரமணியம் நினைவு நிகழ்வில் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நல்லாட்சியின் வகிபங்கு என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறுயதாவது: நல்லாட்சி என்பது பங்குபற்றல், வெளிப்படைத்தன்மை, கணக்குக் காட்டல் என்பவற்றுக்கு அப்பால் செயற்திறன் வாய்ந்ததாகவும், சமத்துவமானதாகவும் இருக்கவேண்டும். பரந்தளவிலான மக்கள்து கருத்தொருமித்த நிலையிலேயே அரசியல், சமூகப் பொருளாதார ரீதியிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வேளை வறியவர்களினதும், நலிந்தவர்களினதும் குரல்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன் தமுது தலைமை உரையில், புகழ் பெற்ற அதிபரான ஓறேற்ர் சுப்பிரமணியத்தின் காலத்தில் உப அதிபராக மீக நீண்ட காலம் இருந்தவர். ஓறேற்றர் கல்லூரியின் புறச் செயற்பாடுகளிலும் கவனம் செலுத்த பாடசாலையின் இயக்கத்தை முழுமையாகக் கொண்டு செலுத்தியவர் வைர்தான். இவர் தனது மரண காலம் வரை ஒழுங்கு, நேரக்கட்டுப்பாடு என்பவற்றை அவர் முழுமையாகக் கடைப்பிடித்தவர் என்றார்.

இந்நிகழ்வில் தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவானந்தராஜா, முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன் ஆகியோரும் உரையாற்றினர்.(44)

## தாமதமாகியது நெற் செய்கை

(யாழ்பாணம்)

பருவமழைப் பொழிவு தாமதமடைந்திருப்பதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் தாமதமடைந்திருப்பதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நெற்பயிர்ச் செய்கைக்கான வயல் நிலங்கள் பண்படுத்தும் நடவடிக்கையில் விவசாயிகள் தற்சமயம் ஈடுபட்டுள்ளனர். இருந்தும் இதுவரை மழைப் பொழிவு இல்லாததின் காரணமாக விதைப்பு பின்தள்ளப்பட்டுச் செல்வதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட மற்றும் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் கடந்த வருடத்திலும் பார்க்க அதிக அளவான நெற் பயிர்ச் செய்கை பண்ணப்பட திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இதற்கு விவசாயத் திணைக்களம் உலக உணவுத் திட்டம் என்பன தமது உதவிகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## உற்பத்தியை மேம்படுத்த வட-கிழக்கில் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜோன் கீல்ஸ் லொஜிஸ்ரிக் தனியார் நிறுவனமும் யு.எஸ். எயிட் நிறுவனமும் இணைந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு சமுதாயத்திற்கான களஞ்சியப்படுத்துதல், போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக செயற்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

இச்செயற்திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கிலுள்ள கமக்கார அமைப்புக்கள், விவசாயம் பாலுணவு என்பவற்றிலும், கடற்றொழிலாளர்கள் கடலுணவு உற்பத்தியிலும் மற்றும் உற்பத்திப் பொருட்களைப் பெருக்கி அவைகளைக் குளிரூட்டி பொதி செய்து களஞ்சியப்படுத்தி அவைகளை சென்றடையும் இடத்திற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் போக்குவரத்து வசதிக்காக மூன்று குளிரூட்டி வாகனங்களை யு.எஸ். எயிட் நிறுவன பிரதிநிதி யோன் கீல்ஸ் நிறுவனப்போக்குவரத்துப் பிரிவுத் தலைவர் றோமேஸ் டேவிட்டிடம் கையளித்தார். (70)

## டெங்கு ஒழிப்பில் அதிரடிப்படையினர்



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பெருகி வரும் டெங்கு நோய் காரணமாக விசேட அதிரடிப் படையினர் பல்வேறு இடங்களில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்

இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் விசேட அதிரடிபடையினர் வவுனியா பூங்காப் பகுதியை துப்புரவு செய்தனர்

வவுனியா பொது பூங்காவுக்கு பல பொது மக்கள் வருகை தருவதால் அவர்களின் வருகை கருதியே இந்த சிரமதானப் பணியினை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டுள்ளனர்

இந்தச் சிரமதானப் பணியில் 50க்கு மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் பங்குபற்றியுள்ளதுடன் இந்தப் பணி மேலும் ஒருவார காலத்துக்கு தொடர்ந்து நடைபெறும் எனவும் நகரசபை மைதானம் புகையிரதநிலையம் பூங்கா வீதி காமினி மகாவித்தியாலயம் பொது நூலகம் போன்ற இடங்களிலும் இப்பணி நடைபெற உள்ளது

மேற்படி இடங்களில் மக்கள் பாவனை அதிகமாக இருப்பதால் டெங்கு நோய் பரவாமல் தடுப்பதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் படையினர் தெரிவித்தனர். (125)

## காபற் வீதியாக செப்பனிடப்படும் அளம்பில் கொக்கிளாய் வீதிகள்

(யாழ்பாணம்)

முல்லைத்தீவு நகரில் இருந்து அளம்பில், கொக்கிளாய் செல்லும் பிரதான வீதிகள் காபற் வீதியாக மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பணிகள் எதிர்வரும் 3 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படவிருப்பதாக அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

கடந்த யுத்த கால நிலைமைகள் காரணமாக கடுமையாக சேதமடைந்திருந்த கடற்கரையோரமான இப்பிரதான வீதி தற்சமயம் புனரமைக்கும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வருவதன் காரணமாகவும், முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் அலுவலகங்கள் முல்லைத்தீவு நகரில் அமைந்திருப்பதன் காரணமாக மீள்குடியேறிய மக்களின் போக்குவரத்துச் சேவையை இலகுபடுத்துமுகமாக இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. (பா)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி விவகாரம் அதிகாரிகளிடம் பேசித் தீர்க்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதி அகலிப்புக்காக உடைக்கப்பட வேண்டியுள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கட்டடத்தை மீள அமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

அண்மையில் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடனான சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பல்வேறு பாடசாலைச் சமூகத்தினர் தங்களது பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக குறை நிறைகளை அமைச்சரிடம் எடுத்துக்கூறினர். அந்த வகையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர், தமது பாடசாலைக் கட்டடம் வீதி அகலிப்புக்காக 15 அடி உட்புறமாக உடைக்க வேண்டியுள்ளது. இதனை மீளக் கட்டித் தருமாறு கேட்ட போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார். (உ.எஸ்)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வன்னி மாணவர்களின் நலன்கருதி கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கற்கை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

இப்பல்கலைக்கழக்கத்தின் சமூக கற்கைகள் துறையினரால் 2011/2012ஆம் கல்வி ஆண்டிற்காக கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி சமூகவிஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறிக்கு மொழியாற்றலுடன் 18 வயதினைப் பூர்த் தியடைந்தவர்களாக இருப்பதுடன் இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்து கொள்ளும் யாவரும் கலைமாணி பட்டப்படிப் பிற்கு நேரடியாக அனுமதிக்கப்படுவர். அத்துடன் முகாமைத்துவ மாணி மற்றும் சட்ட மாணி கற்கை நெறிகளுக்கான அனுமதிப் பரீட் சைகளுக்கும் தோற்ற முடியும்.

அடுத்து இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமாப் பாட நெறிக்கு க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தி உடையோர் தம்மைப் பதிவு செய்துகொள்ளலாம். மற்றும் சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி பாடநெறிக்கான அடிப்படைத் தகைமை க.பொ.த. உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சிதத்தியுடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் மேற்படி பயிற்சி நெறிகளுக்கான விண்ணபபப் படிவங்களை கிளி, புனித திரேசா மகளிர் கல்லூரியில் இயங்கும் கற்றல் நிலையத்தில் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஏற்கனவே, கோரப்பட்ட தொழிலுரிமைத்துவ மும் சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 4ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அவர மேலும் தெரிவித்தார். (உ)







கோண்டாவில் மேற்கு வேத பாராயண மண்டபத்தில் நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் இராஜநாயகம் எழுதிய Queen's English நூல் வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக கணக்கியல் பீட பீடாதிபதி ஏ.கே. அருள்வேல் தலைமையுரை நிகழ்த்துவதையும், நூலாசிரியர் சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானத்திடம் முதற்பிரதியை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

# ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்விக்கு முன்பள்ளிகளின் செயற்பாடே அத்திவாரம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கிளிநொச்சி)

இலங்கையில் வடமாகாணத்திலேயே சிறப்பான முன்பள்ளிக் கல்விச் செயற்பாடு காணப்படுகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் வட மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பப்பருவ அபிவிருத்திப் பிரிவினால் நடாத்தப்பட்ட கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு அல்ல விளையாட்டு மழலைகள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், வட மாகாணத்தில் 40,000 ஆயிரம் முன்பள்ளிச் சிறார்கள் கல்வி கற்கின்றார்கள் அவர்கள் அனைவரையும் இந்த சிறப்பான முன்பள்ளி கல்விச் செயற்பாட்டின் மூலம் சிறந்த ஆளுமை மிக்க ஆற்றலுள்ளவர்களாக வளர்த்தெடுக்கவேண்டும்.

மேலும் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் மாணவர்கள் சிறந்த கல்விப்பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்றார்கள் என்றால் அதற்கு இந்த முன்பள்ளி கல்விச்செயற்பாடுகளே அத்திவாரமிடுகின்றன. இதற்காக முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களை அர்ப்பணித்து சேவை செய்கின்றார்கள் என்றார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை, வட மாகாண முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, கிளிநொச்சி பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பு அதிகாரி ஆர்ப்டீன், கிளிநொச்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் கிளிநொச்சி முல்லை மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# விலங்கு விசர் நோய்த் தினத்தை முன்னிட்டு வளர்ப்பு நாய்களின் அணிவகுப்பு நிகழ்வு

(வவுனியா)

உலக விலங்கு விசர் நோய்த் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட பொதுமக்களுக்கிடையில் நடாத்தப்படும் சிறந்த வீட்டு நாய் வளர்ப்பாளர்களுக்கான போட்டியும், வீட்டு வளர்ப்பு நாய்களின் அணிவகுப்பு நிகழ்ச்சியும் நேற்றுமுன்தினம் வவுனியா காமினி மைதானத்தில் நடைபெற்றது

இந்நிகழ்வில் பலதரப்பட்ட வீட்டு வளர்ப்பு நாய்கள் பங்குபற்றின. மேலும் நாய்களுக்கான போட்டிகளும் எஜமானர்களின் கட்டளைகளை எவ்வாறு செவிமடுக்கின்றன என்ற பயிற்சி நடாத்தப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன

இந்நிகழ்வில் சிரேஷ்ட வைத்திய அதிகாரி சு.மகேந்திரன் வைத்திய அதிகாரி சு.சத்தியலிங்கம் ஆகியோரும் சுகாதார திணைகள ஊழியர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

அத்துடன் இந்நிகழ்வு 2 ஆவது தடவையாக வவுனியாவில் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது (125)

# கண்ணகி நகர் பொது அமைப்புக்கள் வாழ்வாதார உதவிகளை வழங்குமாறு ஜேர்மன் தூதரக அதிகாரியிடம் மனு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்ணகி நகர் கிராமத்தில் உள்ள மக்களுக்கு வீட்டுத்திட்ட மற்றும் வாழ்வாதார உதவிகளைப் பெற்றுத் தருமாறு அரச அதிகாரிகள் மற்றும் கிராமத்திலுள்ள பன்னாட்டு தொண்டு நிறுவனங்களிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்த மனுவை இக்கிராம பொது அமைப்புக்கள் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவராலய அதிகாரியிடம் கையளித்துள்ளனர்.

அண்மையில் கண்ணகி நகர் கிராமத்திற்கு விஜயம் செய்த அதிகாரி அங்குள்ள மக்களிடம் கலந்துரையாடியபோதே பொது அமைப்புக்களினால் இம் மனு கையளிக்கப்பட்டது.

அம்மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இக்கிராமத்தில் 337 வரையான குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் 180 வரையான குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். இவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இதைவிட இக்கிராமத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 49 இளம்விதவைகள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு அவர்களுடைய வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் நோக்குடன் வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதற்கு அரச அதிகாரிகள் மற்றும் இங்குள்ள பன்னாட்டு தொண்டு நிறு வனங்கள் இந்த மக்களுக்கான உதவிகளை வழங் குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராமத்திலுள்ள பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-கே)

# தீர்த்தக்கரை புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

ஈழத்துச் சிதம்பரம் புனித தீர்த்தக்கரையினைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரையிலிருந்து 50 மீற்றர் அகலமும் 200 மீற்றர் நீளமும் கொண்ட பிரதேசம் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆரம்பகட்ட நடவடிக்கையாக இப்பிரதேசக்கடற்பரப்பில் உள்ள முருகைக் கற்கள், கவாட்டி என்பன அகழ்ந்தெடுக்கப்பட்டு அகற்றப்படவுள்ளன.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(27.09.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
புரட்டாதி 10 ஆம் நாள்.

இராகுகாலம் 03.02–4.32, சுபநேரம் 10.32 –12.02,
நட்சத்திரம்: நட்சத்திர உத்தரம் மாலை 6.16 வரை
திதி: அமாவாசை மாலை 5.35 வரை
மஹாளய முடிவுநாள் அமாவாசை விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணமுடை, குடும்பத்தில் சலனம், மனக்கவலை, வீண் அலைச்சல், தேக சுகம் பாதிப்பு.

**ரிஷபம:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, சகோதரபாசம், உடம்பு சுகக் குறைவு, மருத்துவச் செலவு.

**மிதுனம் :**– பணமுடை, சகோதர வெறுப்பு, நண்பர் விமர்சனம், அதிகாரப் போட்டி, உற்சாகம் குன்றுதல்.

**கடகம்:**– குடும்பத்தில் குதூகலம், பணவரவு, வெளிநாட்டு உதவி, மனமகிழ்ச்சி, உடம்பு சுகம் குறைதல்.

**சிம்மம்:**–பணமுடை, குடும்பத்தில் கவலை, கடன்படல், தொழில் முடக்கம், மனச் சஞ்சலம்.

**கன்னி :**– குடும்பத்தில் குதூகலம், பணவரவு, மனமகிழ்ச்சி, நினைத்ததைச் சாதித்தல், தேக ஆரோக்கியம்.

**துலாம் :**– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மன நிம்மதி, வெளியூர்ப் பயணம், தானதர்ம சிந்தனை.

**விருச்சிகம்:**– திருமணப் பேச்சு, பணவரவு, சுற்றத்தார் ஆதரவு, மன நிம்மதி, உறவினர் வருகை.

**தனுசு:**– பணவரவு, தொழில் விருத்தி, நண்பர் வருகை, தேக ஆரோக்கியம், தான தர்மம் செய்தல்.

**மகரம:**– குடும்பத்தில் குழப்பம், பணக்கஷ்டம், உடல் உபாதை, மருத்துவச் செலவு, மன உளைச்சல்.

**கும்பம் :**– பணவரவு, சுற்றத்தார் ஆதரவு, வாய்ப்புக்கிட்டுதல், புதியபொருள் சேர்க்கை, வெளிநாட்டு உதவி.

**மனம்:**– குடும்பத்தில் சலனம், பணமுடை, சுற்றத்தார் ஆதரவு, சகோதரர் உதவி, தொழில் விருத்தி.

# சுகாதாரத்தைப் பேணுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிக்கு வழங்கப்படும் குழாய் மூல குடிநீர் விநியோக நடவடிக்கையின் போது குடிநீர் பெறும் அப்பகுதி மக்கள் தமது பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தண்ணீர்த் தாங்கிகளின் சுகாதாரத்தைப் பேணுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தண்ணீர்த் தாங்கிகளை சுத்தம் செய்து விடுதல், தண்ணீர்க்குழாய்களை நல்ல நிலையில் பேணுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மக்கள் சுகாதாரத்தைப் பேணாதவிடத்து நீர் விநியோகம் துண்டிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி வவுனியாவில் கலந்துரையாடல்

(வவுனியா)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வவுனியாவில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பொலிஸ் உயர் அதிகாரிகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொணடனர்.

இதன் போது சிறுவர்களுக்கான துஷ்பிரயோகங்கள் உரிமை மிறல்கள் இவைகளை தடுப்பதற்கான வழி முறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. ஜக்கிய நாடுகள் சபையில் 1989 சிறுவர்களுக்கான சிறுவர் உரிமைகள் பட்டயம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையில் 1991 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி தெரிவிப்பதற்கு 1929 என்ற எண்ணுடனும் வவுனியா மாவட்ட அலுவலக தொடர்புகளுக்கு 024-2224444 024-5676760 ஆகிய இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (125)


## அடையாள அட்டை கண்டெடுப்பு

கிளிநொச்சி 150 வீட்டுத்திட்டம், கண்ணகிபுரம் மேற்கு கரைச்சி என்னும் முகவரியைச் சேர்ந்த தயாளகுணம் தயாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (770115060 V) தவறவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டு தினமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.





திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 144 மாணவர்களுக்கு 'யாழ் எய்ட்' நிறுவனத்தால் கடந்த 20 ஆம் திகதி கற்றலுக்கான உதவிப் பொருட்களை புலம்பெயர்ந்து இலண்டனில் வதியும் யாழ். இந்து பழைய மாணவன் சிவபுரநாதன் சுபாஸ்கரன் வழங்குவதையும், ஆசிரியை கௌரி யோகேஸ்வரன் உரையாற்றுவதையும் காணலாம்.

## வெற்றிக்கு வித்திட்டோர்



நோபேட்



கிளின்ரன்

நீர்கொழும்பு மாரிஸ்ரேலா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியில் அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான ஐந்து ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்து, போட்டியின் ஆட்டநாயகன் விருதை வென்ற நோபேட்டையும், தொடர் நாயகன் விருதை வென்ற கிளின்ரனையும் காணலாம். இப்போட்டித் தொடர் குறித்து நேற்று பிரசுரமான செய்தி ஐந்து ஓவர்கள் கொண்ட தொடர் என்பதற்கு பதிலாக ருவென்ரி 20 தொடர் என வெளியாகியிருந்தது.

# மென்பந்து கிரிக்கெட் காமாட்சி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் காமாட்சி அணி கைப்பற்றிக் கொண்டது.

இந்த இறுதிப் போட்டி அளவெட்டி பாரதி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியும், கொக்குவில் காமாட்சி அணியும் மோதின.

15 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் முதலில் ஆடிய காமாட்சி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயரூபன் 43, தர்மன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆதித்தன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய ஸ்ரீமுருகன் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் கரன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டினா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டித் தொடரின் ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாகவும் காமாட்சி அணியைச் சேர்ந்த ஜெயரூபனும், சிறந்த பந்து வீச்சாளராக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த சத்தியனும், சிறந்த ரசிகர் மனம்கவர்ந்த வீரராக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த தனுவும் தெரிவானார்கள்.

இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் 'சில்வெஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பளை பொலிஸ் அத்தியட்சகர் வி. எஸ்.பி. வீரசிங்க, வடமாகாண ஆரம்பக்கல்வி வளவாளர் பு.தயானந்தா ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (93)

# கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்



(தும்பளை)

அமரர் பிரபாகரன் நினைவு மென்பந்துத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி ஞானம்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் தும்பளை விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது. இதன் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும், திருநாவலூர் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற திருநாவலூர் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கர் 60, நிசாந்தன் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நந்தன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய திருநாவலூர் அணி 11 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மயூரன் 10, கபிலன் 12, நந்தகுமார் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபானத் மூன்று, சுதர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த சங்கரும், தொடர் நாயகனாக திருநாவலூர் அணியைச் சேர்ந்த தரணனும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த செந்திரனும், தொடரின் சிறந்த மச் வின்னராக ஞானம்ஸ் அணியின் சிரேஷ்ட வீரர் துஷ்யந்தனும் தெரிவானார்கள். (62)

# பங்குஜன் சிறப்புச் சதம் கே.சீ.சீ.சீ. இலகு வெற்றி

(யாழ்ப்பாணம்)

பங்குஜனின் சிறப்பான சதத்தின் மூலம் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் போட்டி ஒன்றில் கே.சீ.சீ.சீ. அணி அபார வெற்றி பெற்றது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் யாழ். சென்றல் அணியும், கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கே.சீ.சீ.சீ. அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பங்குஜன் 101 ஓட்டங்களைப் பெற்று அணியின் ஓட்ட அணியின் எண்ணிக்கையை உயர்த்தினார். மற்றும் சாம்பவன் 16, தாபன் 19, கிருபவன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றஜீவ்குமார், மயூரன் தலா இரண்டு, சலீஸ்ரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். சென்றல் அணி 41.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கலிஸ்ரன் 28, றஜீவ்குமார் 38, றொகான் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிலோஸன் நான்கு, பிரதீஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (07)

# கிண்ணத்தை வென்றது வேலணை பிறையூர் அணி

(யாழ்ப்பாணம்)

வேலணை பிறையூர் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும் ஐயனார் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வேலணை பிறையூர் அணி கைப்பற்றிக் கொண்டது.

வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் ஐயனார் அணியும், வேலணை பிறையூர் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய வேலணை பிறையூர் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், சிறப்பு விருந்தினராகவும் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சிவராசா மற்றும் வேலணைப் பிரதேச செயலர் கே. தவராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எஸ்.எவ்).

# அரையிறுதியில் கே.சீ.சீ.சீ. ஏ

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கே.சீ.சீ.சீ. 'ஏ' அணி தகுதிபெற்றுள்ளது.

கொக்குவில் கே.சீ.சீ.சீ. விளையாட்டுக்கழகத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.


இதில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சீ.சீ.சீ. 'ஏ' அணியும், யாழ். சென்றல் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி 27.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபில்தேவ் 32, பாலேந்திரா 35, யதிர்ஸன் 27, சலிஸ்ரன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாம்பவன் நான்கு, ராகுலன், உத்தமன், பங்குஜன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணி 18.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் உமாநாத் 34, பங்குஜன் 50, ராகுலன் 63 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபாதீஸ் விமலகாந் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியில் கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணி வெற்றிபெற்றதன் மூலம் அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும், அன்றைய தினம் மாலையே பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (07)



லண்டனிலிருந்து வருகை தந்த சென்சாய் பாலா தவபாலனால் (மாஓ தாய் Kick Boxing வல்லுநர்) பல Kick Boxin போட்டிகளில் தங்கம், வெள்ளி பதக்கங்களை வென்ற முல்லைத்தீவு தற்காப்புக்கழக மாணவர்களுக்கான முழுநேர Kick Boxin வகுப்புகள் வழங்கப்பட்டது. முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற இந்த வகுப்பில் பங்குபற்றிய வீரர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் உத்திகளை செய்து காண்பிக்கும் சென்சாய் கா. நாகேந்திரன் (கறுப்புப் பட்டி நான்கு) அவர்களைக் காணலாம்.

# போதிய ஓய்வு தேவை




(லண்டன்)

போட்டித் தொடர்களுக்கு இடையில் வீரர்களுக்கு ஓய்வுதேவை. இதைக கருத்திற் கொண்டு போட்டி அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டும். இல்லையேல் போட்டிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை உருவாகும் என இங்கிலாந்து அணி வீரர் அலெஸ்டர் குக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அதிகமான போட்டிகளில் விளையாடுவதால் வீரர்கள் அடிக்கடி காயம் அடைவதுடன் மிக விரைவிலேயே விளையாட்டிலிருந்து ஓய்வுபெற வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாகிறார்கள். இதைத் தவிர்க்கும் வகையில் போட்டித் தொடர்களுக்கு இடையே போதிய இடைவெளி கொடுக்க வேண்டியது அவசியம். இதைக் கவனத்தில் கொண்டு அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டும். இல்லையென்றால் வீரர்கள் போட்டிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என்றார்.

# ஓய்வு வழங்குவதில் சிக்கல்




(மும்பை)


மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து சச்சின், சேவாக், டோனி, சகீர்கான், ஹர்பஜன் சிங், கம்பீர் ஆகியோருக்கு ஓய்வு வழங்குவதில் இந்திய கிரிக்கெட் சபைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தொடர்ந்து கிரிக்கெட் ஆடி வருவதால் ஓய்வு தேவை என இவர்கள் இந்திய கிரிக்கெட் சபையிடம் கோரியிருந்தனர்.

இந்நிலையில், முழுப் பலம் வாய்ந்த இந்திய கிரிக்கெட் அணியே மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக ஓய்வு வழங்குவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

ஐ.பி.எல். போட்டிகள் முடிந்த அடுத்த வாரத்திலேயே, இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேவையற்ற கற்பனை




கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்தைக் காதலிப்பதாக வந்த தகவலில் உண்மை இல்லை என்றார் ரியா சென். தமிழில் தாஜ்மஹால் படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் ரியா சென்.

பின்னர் பிரசாந்துடன் குட்லக் படத்தில் நடித்த அவர் பிறகு இந்திக்குச் சென்றுவிட்டார். சமீபத்தில் இவரும் இந்திய கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்தும் சில விழாக்களில் கலந்துகொண்டனர்.

இதையடுத்து இருவரும் காதலித்து வருவதாகவும் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும் செய்திகள் வெளியாயின. இதை ஸ்ரீசாந்த் ஏற்கனவே மறுத்திருந்தார். இந்நிலையில் ரியா சென் தனது டிவிட்டர் இணையதளத்தில், கொச்சி ஐ.பி.எல். அணி பங்கேற்ற ஆட்டத்தில் நான் கலந்துகொண்டேன். இதற்காகவெல்லாம் காதல் வருமா என்ன? நான் ஸ்ரீசாந்தைக் காதலிக்கவில்லை. அது தவறான தகவல். இது தொடர்பான உங்கள் கற்பனைகளுக்கு கொஞ்சம் ஓய்வு கொடுங்கள் என்று கூறியுள்ளார்.

# சச்சினுக்குக் கௌரவம்



(மும்பை)

கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு கௌரவம் அளிக்கும்வகையில் மிகப் பெரிய விளையாட்டு அருங்காட்சியகத்தைக் கட்ட மகாராஷ்டிர அரசு முடிவு செய்துள்ளது. கிரிக்கெட்டில் சச்சின் தனது சாதனைகளால் மகாராஷ்டிராவுக்குப் பெருமை சேர்த்துள்ளார். சமீபத்திய உலகக் கிண்ணத் தொடரில் அவரது பங்களிப்பு அளவிட முடியாதது என மகாராஷ்டிர முதல்வர் பிருத்விராஜ் சவான் தெரிவித்தார்.

டெண்டுல்கரின் பெயரில் பெரிய அளவில் விளையாட்டு அருங்காட்சியகம் அமைக்க அரசு தீர்மானித்துள்ளது என சவான் குறிப்பிட்டார். 44 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாநில அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் பேசும்போது சவான் இவ்வாறு தெரிவித்தார்.


# மீண்டும் வென்றது பாகிஸ்தான்

(சென் லூசியா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் சென் லூசியா விளையாட்டு மைானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எல்.எம்.பி. சிமென்ஸ் 51, எம்.என். சாமுவேல்ஸ் 29, ஜே. றோச் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் ஹபீஸ், அப்ரிடி, வஹாப் றியாஸ், அஜ்மல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 221 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 48 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மொகமட் ஷஹாட் 102, மொகமட் ஹபீஸ் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது மிஸ்பா உல்-ஹக் 43 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் றோச் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மொகமட் ஷஹாட் தெரிவானார்.



இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அபாயகரமானவர்கள்



(கொல்கத்தா)

தற்போதுள்ள சர்வதேச வீரர்களில் இந்திய அணியின் சேவாக், மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல், அவுஸ்ரேலிய அணியின் வோர்னர் ஆகியோர் அபாயகரமான வீரர்கள் என கொல்கத்தா அணியின் பயிற்சியாளர் வட்மோர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சேவாக், கெய்ல், வோர்னர் ஆகியோர் தற்போதுள்ள சர்வதேச வீரர்களில் அபாயகரமானவர்கள். இவர்களின் விக்கெட்டை வீழ்த்தும் வரைக்கும் எதிரணிக்குப் பெரும் சிக்கல்தான்.

இந்த ஐ.பி.எல். தொடரில் சேவாக்கும், வோர்னரும் ஒரே அணியில் இடம்பெற்றுள்ளனர். சேவாக், வோர்னரை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் கொண்ட டில்லி அணிக்கு எதிரான போட்டி, எந்த அணிக்கும் எளிதாக இருக்காது. இந்நிலையில் சேவாக் அணியை, அடுத்த போட்டியில் எதிர்கொள்கிறோம். இதில் எங்களால் முடிந்த அளவுக்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிக்குப் போராடுவோம் என்றார்.


# பட்டம் வென்றார் ஜூலியா



(ஸ்டட்கார்ட்)

ஜெர்மனியில் நடந்த கிராண்ட் பிரிக்ஸ் ரெனிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜூலியா ஜோர்கஸ் சம்பியன் பட்டத்தைப் பெற்றார். ஜெர்மனியில் உள்ள ஸ்டட்கார்ட் நகரில், பெண்களுக்கான கிராண்ட் பிரிக்ஸ் டென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ஜெர்மனியின் ஜூலியா ஜார்ஜஸ் மோதினர். இதில் வோஸ்னியாக்கியை 6-7, 3-6 என்ற நேர் செட்டில் வென்ற ஜூலியா ஜோர்கஸ் சம்பியன் பட்டத்தை வென்றார்.

# உத்தியோகபூர்வ அறிவிப்பு




(கொழும்பு)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப் போவதாக இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க உத்தியோகபூர்வமாக இலங்கை கிரிகெட் சபைக்கும் மற்றும் அணித் தெரிவாளர் குழுவிற்கும் நேற்று அறிவித்தார்.

வலது முழங்காலில் நீண்டகாலமாக ஏற்பட்டுள்ள உபாதையை கருத்திற் கொண்டேதான் இந்த முடிவை எடுத்துள்ளதாக லசித் மலிங்க அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் விளையாடுவதை கருத்திற் கொண்டு அவரை நாடு திரும்புமாறு இலங்கை கிரிக்கெட் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக லசித் மலிங்க அறிவித்துள்ளமையை ஊடகங்கள் மூலமே அறிந்து கொண்டதாகவும், கிரிக்கெட் சபையிடம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையெனவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது. இந்நிலையிலேயே அவர் இந்த முடிவை நேற்று கிரிக்கெட் சபையிடம் அறிவித்துள்ளார்.


# திருப்தியில்லை



(புதுடில்லி)

முரளிதரன் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் அணி சிறப்பான வெற்றிகளைப் பெறும் என கொச்சி அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: உலகின் முதல்தர சுழற்பந்து வீச்சாளர் என்றால் அது முரளிதரனாகத்தான் இருக்க முடியும். ஆனால், தற்போது அவர் சிறப்பாகச் செயற்படவில்லை. எங்கள் அணியின் தோல்விக்கும் இதுவும் ஒரு காரணம்தான். அவர் சிறப்பாக செயற்படுவாரேயானால், அணி சிறப்பாக வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளும் என்றார்.

# துடுப்பாட்ட வீரராக களமிறங்கத் தயார்



பாகிஸ்தான் அணி என்னைவிடச் சிறந்த விக்கெட் காப்பாளரைத் தேர்வு செய்தால் சிறந்த துடுப்பாட்ட வீரராக களமிறங்கத் தயாரென அந்த அணியின் வீரர் கம்ரன் அக்மல் தெரிவித்தார். மேற்கிந்தியத்தீவுகளுடனான ரி-20, ஒரு நாள் தொடர்களிலிருந்து நீக்கியமை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கும் பட்சத்தில் நான் நிறைய சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. எந்த வரிசையிலும் களமிறங்குவதற்குத் தயாராகவே உள்ளேன்.

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண நியூசிலாந்துடனான போட்டியில் அணி வீரர் றோஸ் ரெய்லரின் மூன்று பிடிகளை எடுக்கத் தவறியதை அடுத்து இன்று வரை வேதனையுடனேயே உள்ளேன். ஆனால், சிலர் அதனை மறக்காமலேயே உள்ளனர். என்னை விமர்சிக்கும் சிலர் எனது கடந்த கால செயற்பாடுகளை மறந்துவிட்டனர். நான் அணி மீது மிகுந்த அன்பு வைத்துள்ளேன்.

விக்கெட் காப்பாளர் பணியிலும், துடுப்பாட்டத்திலும் சிறப்பாகவே செயற்பட்டேன். ஆனால், தற்போது என்னைத் தேசிய அணியிலிருந்து விலக்கியுள்ளனர். எனவே, என்னைத் தேர்வாளர்கள் எந்த நிலையில் விளையாடத் தெரிவு செய்தாலும் அதற்குத் தயாராகவே உள்ளேன். பாகிஸ்தானுக்காக விளையாடிய விக்கெட் காப்பாளர்களில் நானே பெரு மளவு துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ளேன் என்றார்.

# டெங்கு நுளம்பு ஒழிப்புத் தொடர்பாக அரசிடம் முறையான திட்டம் இல்லை

## சுகாதார தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு



(கொழும்பு)

டெங்கு ஒழிப்புத் தொடர்பாக அரசாங்கத்திடம் முறையான திட்டமொன்று இல்லாமையால் அது வெற்றியளிக்கவில்லை என சுகாதார தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

டெங்குக் காய்ச்சல் தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளிவரும் காலங்களில் மாத்திரமே டெங்கு ஒழிப்புத் திட்டங்கள் முனவைக்கப்படுவதாக சுகாதாரத் தொழிற்சங்க கூட்டமைப்பின தலைவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியான திட்டங்களின் மூலம் டெங்கு ஒழிப்புக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமையே நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தடையாகவுள்ளதென சுகாதாரத் தொழிற் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மக்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவுடன் மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளாமையே உயிரிழப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிததுள்ளது.

நாட்டில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள இருப்பதாக சுட்டிக்காட்டிய சங்கத்தின் தலைவர் டாக்டர் உப்புல் குணவர்தன, மக்கள் தகுதியான வைத்திய அதிகாரியிடம் சென்று . ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்புக்காக சுகாதார அமைச்சு தற்காலிக திட்டங்களையே செயற்படுத்துவதாக அரச சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

### 2 அடி நீளமான வாக்குச் சீட்டு

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களின்போது கொழும்பு மாநகர சபைக்கான வாக்குச்சீட்டு 2 அடியைவிட நீளமானதாக இருக்கும் என தேர்தல்கள் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைக்கு 9 அரசியல் கட்சிகளுக்கும் 10 சுயேட்சைக் குழுக்களுமாக 19 அணிகள் போட்டியிடுவதாக அவா கூறினார்.

இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை வாக்காளர் அட்டைகளுடன் இணைப்பதும் கடினமாகவுள்ளதாகவும் அந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# டெங்கு நோய் காரணமாக 138 பேர் உயிழந்தனர்

(கொழும்பு)

இந்த வருடம் நாட்டில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 440 ஆக உயர்ந்துள்ளது.

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 138 பேர் இந்த வருடம் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது. இந்த காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் வகையில் தொடர்ந்தும் நாடளாவிய ரீதியில் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# மூவின மக்களும் ஒன்றிணைய தீர்வினை வழங்க வேண்டும்

(கொழும்பு)



வடக்கு, கிழக்கு மாகாணங்க . ளில் வாழ்கின்ற தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அனைவரும் ஒன்றிணைந்து வாழக்கூடிய நாடொன்றை உருவாக்க முடியுமெனவும்,

சிலர் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண்பதை விடுத்து அவற்றை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவதாகவும் வீடமைப்பு பொறியியல் நிர்மாணத் துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வவுனியா அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்திறகு அடிக்கல் நாட்டும் வகையில் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பகைமையை தோற்றுவித்தவர்களுக்கு வெற்றி கிடைக்காதெனக் குறிப்பிட்ட அவர், அவர்களுக்குத் தோல்வி மட்டுமே கிட்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் காலங்களிலும் பகைமையை தோற்றுவிப்பவர்களுக்கு தொடர்ச்சியாகத் தோல்வியே கிடைக்குமெனவும் குறிப்பிட்டார்.

# வெற்றியின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தயார்

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

போரின் வெற்றி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயார் என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் ஓர் கட்டமாக அண்மையில் இந்திய கடற்படையினருடன் கூட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இறுதிக் கட்டப் போரின் போது கடற்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை இந்திய கடற் படைத்தளபதி வியந்து பாராட்டினார். உலகின் முதனிலையான கடற்படைகளில் ஒன்றான இலங்கைக் கடற்படைக்குத் தலைமை தாங்குவது பெருமிதம் அளிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பொலிஸ் நிலைய அதிகாரி வாகன விபத்தில் பலி

(கொழும்பு)

தந்திரிமலை - சந்தமல்லி பிரதேசத்தில் நேற்று அதிகாலை 1.30 அளவில் இடம்பெற்ற வாகன வபத்தில் தந்திரிமலை பொலிஸ நிலைய பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி பயணித்த ஜீப் வண்டியே விபத்திற்குள்ளாகியுள்ளது, விபத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி அநுராதபுரம் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

# ரமேஷின் மனைவி வத்சலா தென்னாபிரிக்காவில் அடைக்கலம்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சாவேந்திரா சில்வாவிற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ள வத்சலாவிற்கு தென்னாபிரிக்கா அடைக்கலம் வழங்கியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி ரமேஸின் மனைவியான வத்சலா என்பவர், சாவேந்திர சில்வா விற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். மேகலா, கலைச் சுடர் மற்றும் பிரபாகரன் ஆகிய அவரது பிள்ளைகளுக்கும், அவருக்கும் தென்னாபிரிக்கா அடைக்கலம் வழங்கியுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கப்பல் மூலம் வத்சலாவும் அவரது பிள்ளைகளும் தென்னாபிரிக்கா சென்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. வத்சலாதேவி, புலிகளின் கிழக்கு மாகாண பெண தளபதியாகச் செயற்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# துறைமுக நிர்மாணப் பணியினால் கடல் அரிப்புக்குள்ளாகும் ஒலுவில்



(அம்பாறை)


துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதியில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும கடல் நீர்த் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாகவே ஒலுவில் கிராமப் பகுதியில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாக மீனவர்களும் காணி உரிமையாளர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் கடலோரக் கிராமங்களில் ஒன்றான ஒலுவில் கிராமம் நாளாந்தம் கடலரிப்பிற்கு உள்ளாகி வருவதாக மீனவர்களும் கடலோர காணி உரிமையாளர்களும் கவலையடைந்துள்ளனர். ஏற்கனவே நிலப்பற்றாக்குறையை எதிர்நோககியுள்ள தமது கிராமம் சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பை கடலரிப்பிற்கு இழந்து விட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒலுவில் பிரதேசத்தில் அரசாங்கத்தினால் தற்போது புதிய துறைமுகமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக ஒரு பகுதியில் இடம்பெற்று வரும் கடல் நீர்த்தடுப்பு நடவடிக்கைகள் காரணமாகவே தமது பகுதியில் இந்த கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாக மீனவர்களும் காணி உரிமையாளர்களும் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

பெருமளவிலான தென்னந் தோட்டங்களும் கடலரிப்புக்குள்ளாகிவிட்டதாக தோட்ட உரிமையாளர்கள் கூறுகின்றனர். இதுவரை 50 இற்கும் மேற்பட்ட மீனவர் வாடிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இதுவரை 200 மீற்றர் நீளமான கடலோரப் பகுதி கடலரிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

ஒலுவில் கடலோரப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்புக் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஏற்றுக்கொண்டுள்ள அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர், துறைமுக நிர்மாணப் பணிகளின் போது இப்படியான நிலைமை தற்காலிகமாக ஏற்படும் என்றும் காலப்போக்கில் வழமை நிலைமைக்கு வந்துவிடும் எனத் துறைமுக அபிவிருத்தி அதிகார சபையினால் தனக்கு பதிலளிக்கப்பட்டதாகக் கூறினார்.



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு கொழும்பு பேரை வாவியைச் சுற்றி ஒரு கிலோமீற்றர் நீளமான ஓவியம் வரையும் நிகழ்வு நேற்று ஆரம்பமாகியது. 111 பாடசாலையைச் சேர்ந்த மாணவ, மாணவியர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கல்வி அமைச்சு இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

# ரயில் விபத்துத் தொடர்பான அறிக்கை இதுவரையும் வெளியிடப்படவில்லை

(கொழும்பு)

அளவ்வ ரயில் விபத்து தொடர்பாக ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை என ரயில்வே தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணி தெரிவித்துள்ளது.


இந்த விபத்து இடம்பெற்று பத்து நாட்கள் கடந்துள்ளதாக முன்னணியின் செயலாளர் சம்பத் ராஜித தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் விபத்து இடம்பெற காரணமாக இருந்த விடயங்களை அறிவதில் மக்கள் ஆர்வமாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எவர் எத்தகைய கருத்துக்களை முன்வைத்தாலும் பாரியதொரு விபத்து இடம்பெற்று ஒரு வாரத்திற்குள் விசாரணை அறிக்கையை வெளியிடுவது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் என ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வை வென்றெடுக்க முடியும்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த தேசிய மகாநாடு நேற்றுமுன்தினம் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், விநோநோதராதலிங்கம், ஸ்ரீதரன் மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் அரசியல் பிரிவுத் தலைவர் என்.கே.சிவாஜிலிங்கம் உட்பட மறறும் பலர் கலந்து கொண்டனர்.**

**இம்மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகளின் தலைவர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. இம்மாநாட்டில் கட்சியின் புதிய செயலாளராக தெரிவு செய்யப்பட்ட முன்னாள் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மாநாட்டின் தீர்மானங்களை அறிவித்தார்.**

**இத்தீர்மானங்கள் வருமாறு,**

◆ தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி நிபந்தனை அற்ற ஆதரவினை கொடுத்தது. எமது ஒற்றுமையினை நிலைநாட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து பல்வேறு உளளூராட்சி மன்றங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் சில வேட்பாளர்களை, தமிழ்மக்களின் விருப்பத்திற்கு அமைய கொடுத்து உதவினோம். உதயசூரியன் சின்னத்தில் இரு உளளூராட்சி மன்றங்களில் போட்டியிட்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு வெற்றிகளையும் ஈட்டிக்கொடுத்தோம். தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர் தேசிய கூட்டமைப்போடு உள்ள உறவினை மீண்டும் வலியுறுத்தி பொது மக்களின் நன்மைக்காக ஒன்றுசேர்ந்து செயற்படுவதோடு ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படாத வகையில் செயற்படும்.

◆ தமிழர் விடுதலைக் கூட்டணி தமது அகிம்சைக் கொள்கையை மீண்டும் வலியுறுத்தி சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் இசைய வைத்து சமாதான முறையில் நியாயமான தீர்வை வென்றெடுக்கும்.

◆ தமிழர் விடுதலைக் கூட்டணி சிங்களவர், இஸ்லாமியர், மலாயர், பறங்கியர், ஆகியோருடனும் மற்றும் இன மத மக்களுடனும் நல்லுறவைப் பேண திடசங்கற்பம் பூண்டுள்ளது. அதேவேளை அரசு இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் சமமாக நடத்தி அவர்களுடைய மறுக்கமுடியாத ஜனநாயக மனிதாபிமான உரிமைகளுடன் ஏனைய உரிமைகளையும் அனுபவிக்க உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

◆ 30 ஆண்டிற்கு மேலாக வடகிழக்கு வாழ் மக்கள் அனுபவித்த தாங்க முடியாத துன்பங்களை குறிப்பாக யுத்தம் உச்சக்கட்டம் அடைந்த போது மேலோங்கி நின்ற வன்முறையை வேறு எந்த துன்பச் சம்பவத்துடனும் ஒப்பிட முடியாது. சுனாமி போன்ற தேசிய இயற்கை அழிவினை நாட்டில் உள்ள அனைவரினதும் குறிப்பாக தமது சமய நம்பிக்கைக் கோட்பாடு ஆகியவற்றில் நம்பிக்கை வைத்திருக்கும் சிங்கள கிராம வாசிகளில் மூத்தோரின் உள்ளத்தினை தொடடுள்ளது என்றால் தழிழ் மக்களுக்கு எற்பட்ட அழிவுகள் எவ்வளவு தூரம் அவர்களை பாதித்திருக்கும் என்பதை கற்பனை கூட பண்ணிப்பார்க்க முடியாது. சுனாமியின் பின், ஓர் சிங்கள மூதாட்டி தன் தலை மீது பல உணவுப் பொட்டலங்களை சுமந்து, சீரற்ற பாதையினால் வெகுதூரம் நடந்து சென்று, தனக்கு முன் பின் தெரியாத தமிழ் இஸலாமிய சகோதரர்களின் பசியினை தீர்தது வைத்தார் என கூறும் பொழுது எனக்கு கொஞ்சம் பெருமையாக தான் இருக்கின்றது. இதேபோன்று ஒரு சிங்களவர் கூட் இல்லாத தமிழ் இஸ்லாமிய அகதிகளுக்கு ஓர் பௌத்த மத குரு அகதி முகாம் அமைத்து அளப்பரிய சேவை செய்தார். தமிழர்களோ, இஸ்லாமியர்களோ, சிங்களவர்களோ கிராமவாசிகளின் மன போக்கு இவ்வாறு தான் எங்கும் இருக்கின்றது. எனவே ஓர் பிரச்சினையை அனுதாபத்தோடு அணுகக்கூடிய சாதாரணமான மக்களிடம் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணும் பொறுப்பினை ஜனாதிபதி கையளிக்க வேண்டும். கிராமவாசிகள் நியாயமாக சிந்திப்பர், நியாயமாகவும் நடப்பர். இதனை சர்வதேச வாக்கெடுப்பு மூலம் மக்களின் தீர்ப்புக்கு விடுவதே சிறந்தது என தமிழர் விடுதலைக் கூட்டணி நம்புகின்றது.

◆ யுத்தம் முடிவுற்று 2 வருடங்களின் பின்பும் மீளக் குடியேற்றப்பட்ட ஒரு தொகுதி மக்கள் மீளக்குடியேறி ஒருவருடம் ஆகியும் முறையாக தமது வாழ்வினை ஆரம்பிக்கவில்லை. அநேகருக்கு தமது வாழ்க்கையினைக் கொண்டு நடத்துவதற்குரிய போதிய வழிவகை இல்லை. அநேகர் வீட்டுத்தலைவன கணவன், மனைவி, பிள்ளைகள் என இழந்துள்ளனர். அநேகமாக எல்லா மக்களும் தமது உடைமைகள் அனைத்தையும், வீடுகளினையும் இழந்துள்ளனர். ஆகவே தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் பொருத்தமான வழிமுறையில் உள்ளூர் மக்களின் பங்களிப்போடு மீளக் குடியேற்றம் புனர்நிர்மானம் ஆகியவற்றை நீதியான முறையில் அமுல்படுத்த வேண்டும்.

◆ வட கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களில் சிலர் 18 தடவைகளுக்கு மேல் இடம் பெயர்ந்துள்ளனர். அத்தகைய நடைமுறையின் போது அவர்கள் தமது சொத்துக்கள் அனைத்தையும். இழந்து தம் வாழ்கையினை கொண்டு நடத்த முடியாத அளவிற்கு ஓட்டாண்டி ஆகிவிட்டனர். இந்த பரிதாபகரமான நிலையில் இவர்களின் முக்கியமான பிரச்சினை காணி சம்பந்தப்பட்டதே. தங்களுடைய காணிகளையும் தாங்கள் வாரிசாக பெற்ற காணிகளையும் இன்னும் அநேகர் அடையாளம் காணவில்லை. அநேகமான காணிச் சொந்தக்காரர்கள் பிறநாட்டில் வாழ்கின்றனர். அவர்களில் சிலர் பராயம் அடையாதவர்கள். அநேகர் தமது காணி உறுதிப்பத்திரங்களை இழந்துள்ளனர். இத்தகைய பல பிரச்சினைகள் மத்தியில் மக்களை தமது காணிகளை 'பதியுமாறு கேட்பது அவசியம் தானா? தாம் ஆண்டு அனுபவிக்கும் காணிகளையும் பதியுமாறு கேட்பதை தமிழர் விடுதலைக்கூட்டணி தனது கடும் ஆட்சேபனையை அரசிற்கு தெரிவித்துக் கொள்கின்றது. அரசு காணி கொடுக்க விரும்பின் காணிப் பிரசசனை தீரும் வரை பொறுத்திருக்க வேண்டும். இத்திட்டத்தினை நாடு பூராகவும் அமுல்படுத்துவதாக இருப்பின் அரசு அப்பணியினை இடம் பெயராது வாழ்கின்ற மாவட்டங்களில் ஆரமபிக்கலாம் நில சொந்தக்காரர்களிடமிருந்து அவர்களின் காணி விபரங்களினை பெறுவதனை அரசு உடனடியாக கைவிட வேண்டும் என தமிழர் விடுதலை கூட்டணி வன்மையாக வற்புறுத்தி வேண்டுகின்றது.

◆ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்னும் சந்தேகத்தில் பல இளைஞர், யுவதிகள் இன்று தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அநேகர் குற்ற மற்றவர்கள் அத்தகை யோரை உடன் விடுதலை செய்யும்மாறு அரசினை தமிழர் விடுதலை கூட்டணி வேண்டுகின்றது.

8. யுத்தம் மக்களுக்கும், உடைமைகளுக்கும் பல நஷ்டத்தினை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் ஆயுதங்களைக் கண்டதும் பைத்தியம் பிடித்தது போல் காணப்படுகின்றனர். கிறிஸ் பூதங்களின் பிரசன்னமும் நடவடிக்கைகளும் நிலைமையினை மிகவும் மோசம் அடைய வைத்துள்ளது. இவ்விடயத்தில் ஜனாதிபதி ஆணைக் குழுவையோ அனறில் உயர் சக்தி படைத்த ஒரு குழுவினையோ நியமித்து பூரண விசாரணை நடாத்த வேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணி ஜனாதிபதியினை வற்புறுத்துகின்றது.

◆ தம் வீடுகளிலிருந்து விரட்டப்பட்ட இஸ்லாமிய மக்கள் அவர்களின் வீடுகளில் மீள்குடியேற்றப் படவில்லை தம் உடைமைகள் அனைத்தையும் கைவிட்டு சொறப பணத்துடனேயே சென்றனர்.

அவர்களுக்கு முறைப்படி நஷ்டஈடு கொடுத்து அரசே வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் அதேநேரத்தில் 1983 ஆம ஆண்டு யூலைக்கலவரத்தில் நாடு தழுவி வாழ்ந்த தமிழர்கள் தம் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து நாட்டைவிட்டு வெளி யேறி தமிழ்நாட்டில் குடியேறி னர். எனவே போதியளவு நஷ்ட ஈடு வழங்குவதன் மூலம் அவர்கள் மீளக்குடியேறுவதற்கு தூண்டுதலாக அது அமையும். அவர்கள் இழந்த அசைவற்ற ஆதனஙகளை பிடித்து வைத்திருப்பவர்களிடமிருந்து மீட்டுக்கொடுக்க வேண்டும்.

◆ இராணுவத்தினரால் யுத்தததின் போது கைப்பற்றப்பட்ட தங்கம் மக்களுக்கு சொந்தமானது. இத்தங்கத்தை சட்டப்படி யும் தார்மீக அடிப்படையிலும் மக்களுக்கே சொந்தமாகையினால் அரசு மக்களுக்கே மீளக் கையளிக்க வேண்டும் என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகின்றது.

◆ மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் முன்னொருபோதுமில்லாத வகையில் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். பொத்துவிலிலுள்ள அறுகம்பை தொடக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள மயிலிட்டி வரை இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் சொல்லொணா கஸ்டங்களை அனுபவிக்கின்றனர். மீன் பிடிப்பதற்கு மீனவர்கள் எவரிடமும் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய அவசியம் இல்லை. உள்ளூர் மீனவர்களுக்கு இத்தகைய இடையூறுகளை கொடுப்பதை வன்மையாக கண்டித்து 30 ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு சுதந்திரமாக தொழிலில் ஈடுபட்டார்களோ அவ்வாறே அவர்களை விட்டுவிடும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை வலியுறுத்துகின்றது.

◆ படையினரால் குறிப்பாக பெண் படையினர் மனிதநேய சேவையை இயற்கை அனர்த்தங்களின் போதும் அகதி முகாம்களிலும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆற்றிவந்த தொண்டை தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கீகரித்து பாராட்டையும் தெரிவிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரின் கொடூரமான நடவடிக்கைகள் பற்றி மக்கள் அறிந்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களையும் இராணுவத்தினரையும் அகற்றும்படியும் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை வற்புறுத்துகிறது. கடந்த காலத்து மகிழ்சிகரமான வாழ்க்கைக்கு திரும்பிவிட்டோம் என மக்கள் எண்ண வேண்டுமேயொழிய வேறு சிலரின் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு விட்டோம் என்றல்ல. நாட்டிற்கு சுமூக வாழ்வை மீள கொண்டு வர அரசுக்குள்ள ஒரேயொரு வழி இது மட்டுமே. 200,000 இற்கும் மேற்பட்ட மக்களின் உயிர்களையும் பல கோடிகள் பெறுமதியான சொத்துக்களையும் இழந்தும் இனப்பிரச்சனை தீர்வுக்கு அவசியமற்ற காலவிரயத்தை ஏற்படுத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது அதிருப்தியை தெரிவிப்பதுடன், அவசியமேற்படின் பொருத்தமான சில மாற்றங்களுடன் இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த தீர்வை அரசு முன்வைக்க வேண்டுமென நாம் அரசை வற்புறுத்துகின்றோம்.

◆ இந்திய முறையிலான ஆட்சிக்கு இலங்கை வாழ் மக்களில் பெரும்பான்மையினர் உடன்பாடானவர்கள் என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீர்க்கமான அபிப்பிராயமாகும்.

◆ இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு ஒற்றையாட்சி முறையில் அமையுமானால் சமாதானமோ அல்லது நிரந்தர தீர்வோ ஒருபோதும் ஏற்படாது என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் திடமான எண்ணக்கருவாகும்.

◆ மக்கள் தம் உறவுகளை எண்ணி துயருடனும், தாமே இன்னமும் முறையாக வாழ்வை ஆரம்பிக்காத நிலையிலும் பிறரை அவர்கள் மத்தியில் குடியிருக்க வைப்பது எதிர்பார்ப்புக்கு முரணாக அமையும் என்ற பாடத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுக்கு புகுத்துகின்றது.

# யாழ்ப்பாண வாழ்வியல்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் நடத்தும் "யாழ்ப்பாண வாழ்வியல்" எனும் நான்கு நாள் கண்காட்சி இடம்பெற்று வருகின்றது.

இக்கண்காட்சியில் பண்டைய கால மக்களின் பாவனைப் பொருட்கள், ஆரம்பகாலக் கட்டடங்கள், கைத்தொழில் பொருட்கள், இயற்கையுடன் இணைந்த உற்பத்திகள், நீரியல் வள உபகரணங்கள் எனப் பலதரப்பட்ட அறிவியல் சார்ந்த வரலாற்று விடயங்கள் இப்பொருட காட்சியில் ஏற்பாட்டாளர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இப்பொருட் காட்சியில் கண்டு இரசிக்க வந்திருந்தவர்கள் தங்களது அனுபவங்களை தினமுரசுடன் பகிர்ந்து கொண்டனர்.



**பேராசிரியர் பி.பத்மநாதன், தகைமைசார் பேராசிரியர், வரலாற்றுத் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.**

இந்தப் பொருட்காட்சி போன்று யாழ்.குடாநாடைப் பொறுத்த வரையில் நடைபெற்றதில்லை. எந்தப் பொருட்காட்சியிலும் உள்ளடக்கப்படாத பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக புரதான வரலாற்றுச் சம்பந்தமான தொல்லியல் சின்னங்கள் நிறையக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இது பலருக்கு பயன்தரக் கூடியதாகும். இது தவிர, இங்கு பல வகையான நாணய வகைகள் உள்ளன. இது குடாநாட்டில் பலநாட்டு வாணிப முறையை அறியக் கூடியதாக உள்ளது.

யுத்தத்தால் பெரும்பாலும் பண்பாடுப் பொருட்கள் சிதைவடைந்தன. இப்பொருட்காட்சியைப் பார்கின்றபோது பெரும்பாலும் பாதுகாக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இது வரவேற்கத் தக்கது.

அருங்காட்சிப் பொருட்கள் தற்போதைய காலத்தில் பெறுவது தொடர்பாக ஈடுபாடு இல்லை. ஆனால் இதில் காட்சிப் படுத்தப்பட்டிருப்பது நன்றாக உள்ளது.

இதுபோன்ற பொருட்காட்சி மாணவர்கள் மத்தியில் ஒரு ஆர்வத்தைத் தூண்டியுள்ளது. நிச்சயமாக வரலாறறுத் தொடர்பான ஆய்வுக்கு பயனுள்ளதாக இப்பொருட் காட்சி அமையும் எனக் கருதுகின்றேன்.




**எம்.என்.பாத்திமா சப்ரா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,**

நான் தமிழ்த்துறை பாடத்தைத் தொடர்ந்து வருகிறேன். நான் வடமேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணப் பாரம்பரியம் குறித்து அறிய எனக்கு ஆவலாக இருந்தது. அந்த ஆவலை இப்பொருட்காட்சி பூர்த்தியாக்கியுள்ளது. இதை நான் பார்வையிட்மையை ஒரு பாக்கியமாக நினைக்கின்றேன். இதைப் பார்த்ததும் ஒரு தெளிவு எனக்குள் ஏற்பட்டுள்ளது. நிறைய விடயங்களை அறிய முடிந்தது. உதாரணமாக பாரம்பரிய சடங்கு முறைகள், கருத்துக்கள அருமையானவை. ஆனால் அழகிய முறையில் இவை திட்டமிடப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

இது உண்மையில் வரவேற்கத்தக்க விடயம். யாழ்.பண்பாட்டு அம்சங்கள் தனித்துவமானது.

அதனை இலகுவாகவும். தெளிவாகவும் தற்போது இப்பொருட்காட்சி மூலம் புரிந்துகொள்ள முடிந்தது. இதனை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





**சீ.தனலக்ஷன், சரசாலை சரஸ்வதி மகா வித்தியாலயம்.**

இந்தப் பொருட்காட்சி ரொம்ப நன்றாக உள்ளது. புதுமையாக உள்ளது. பழைய காலப் பொருட்களைக் காணும்போது அதிசயமாகப் பார்க்கிறோம்.

புராதன கட்டில்கள், ஆலய வகைகள், வரலாறுகள் குறித்து நன்றான விளக்கங்களைப் பெறமுடிந்தது.

ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஆயுர்வேத மருந்து களை அறிய முடிந்தது. இது என்னை போன்ற மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக உள்ளது.

பல புதுமையான விடயங்களை அறிய முடிந்தது. பழைய வகைப் போக்கு வரத்துச் சாதனங்கள் என்னைக் கவர்ந்த பொருட்களாகும். இரண்டாவது முறையாக வந்து பார்க்கின்றேன்.



**சவுந்தராஜா வருண், யாழ்.பல்கலைக்கழகம்.**

நான் யாழ்.பல்கலைக் கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் பயின்று வருகின்றேன். யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சியில் நான் பல விடயங்களை அறிந்து கொண்டேன். இது நல்ல பயனைத் தந்துள்ளது எனது பாடத்துறைக்குப் பிரயோசனமாக இருந்தது. மேலும வரலாறு தொடர்பாக யாழ்.மக்கள் மத்தியில் பூரண அறிவு இல்லை. ஆனால இப்பொருட் காட்சி அவர்களுக்குப் பூரண அறிவூட்டும் என நம்புகின்றேன்.

இவ்வாறான பொருட் காட்சிகள் வருடா வருடம் நடத்தப்பட வேண்டும் ஏறபாடு செய்தவர்களை பாராட்டுகின்றேன். பணடைய காலத்தில் நடந்த நிகழ்வுகளை இப்பொருட் காட்சி படம் பிடித்துக் காட்டுகிறது. வரலாறுகளைத் தெளிவாக அறிய முடிகிறது. எல்லாப் பகுதியும் எனக்குப் பிடித்துள்ளது. ஒரு ஆவணமாகப் பயன்படும் என நம்புகின்றேன். இதுபோன்ற கண்காட்சி தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும். அதுதான் எனது எதிர்பார்ப்பு என்றார்.

பா.சிகான்

# நூறுக்கும் மேற்பட்ட புலிகள் சுவிஸில் தஞ்சமடைந்துள்ளனர்

## கூறுகின்றது திவயின பத்திரிகை

(கொழும்பு)

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய 100 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் சுவிஸ் நாட்டில் தஞ்சமடைந்துள்ளதாக திவயினப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளுடன் குறித்த நபர்களுக்கு தொடர்பு இருப்பதாகக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பில் சுவிஸ்சர்லாந்து சட்ட மா அதிபர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என விசனம் வெளியிடப்பட்டுள்ளது. பிறவுன்பெர்க் மற்றும் சூரிச் ஆகிய நகரங்களில் புலி உறுப்பினர்கள் செறிந்திருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்களில் பலர் வேறு நாடுகளின் ஊடாக சுவிட்சர்லாந்திற்குள் பிரவேசித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சுவிஸ்சர்லாந்துக்கான இலங்கைப் பிரதித் தூதுவர் ஜகத் டயஸிற்கு எதிராக அந்நாட்டு சட்ட மா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்க உள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. போர்க் குற்றச் செயல்களின் அடிப்படையில் ஜகத் டயஸிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேஜர் ஜெனரல் ஜகத் டயஸிற்கு எதிராக விசாரணை நடத்த முடியாது என சுவிஸ் சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார். விசாரணைகள் நடத்தப்படமாட்டாது எனத் தெரிவித்து ஐந்து பக்க ஆவணமொன்றை சட்ட மா அதிபர், இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜகத் டயஸ் உயர் இராணுவப் பயிற்சி ஒன்றைத் தொடர்வதற்காக விரைவில் சீனா விஜயம் செய்ய உள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# தேயிலைத் தோட்டங்களில் நோய் பரவ பிழையான நடுகை முறையே காரணம்

## தேயிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

தேயிலைக் கன்றுகளை நடும்போது உரிய நடைமுறை பின்பற்றப்படாமையே தென் மாகாண தேயிலைத் தோட்டங்களில் நோய பரவுகின்றமைக்கான காரணம் என தேயிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

தேயிலைத் தோட்டங்களை நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பாக தோட்ட உரிமையாளர்களுக்கும் செய்கையாளர்களுக்கும் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் கலநிதி ஜெரி ஜயவர்தன குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றத்தினால் தென் மாகாணத் தேயிலைச் செய்கையில் நோய்கள் பரவி வருவதாகவும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. தேயிலைச் செடிகளை நடுவதற்கு முன்னதாக நிலத்திற்கு புகை விசுறுவதன் மூலம் செய்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை பின்பற்றப்படாத தேயிலைத் தோட்டங்களில் நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக தேயிலை ஆராய்சசி நிலையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# கொச்சிக்கடையைச் சேர்ந்த பெண் வத்தளையில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

வத்தளை எல இவுர என்னுமிடத்திலிருந்து பெண்ணொருவரது சடலத்தை வத்தளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் மீட்கப்பட்ட மேற்படி சடலம் தறபோது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

35 வயது மதிக்கத்தக்க இவர் நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியான ஹெட்டி ஆராச்சி தெவித்தார்.

தமக்குக் கிடைக்கப் பெற்ற தகவலொன்றின் பேரிலேயே சடலம் மீட்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

# மருதானை பொலிஸ் களஞ்சியசாலையில் தீ

(கொழும்பு)

மருதானை பொலிஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு சொந்தமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையிலேயே தீ பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை 5.30 மணியளவில் தீ அணைப்பு சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# தன்னியக்க மின் விளக்குகளை வீதிகளில் பொருத்த ஏற்பாடு



(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் வீதியோரங்களில் தன்னியக்க மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவிக்கிறது.

இதன் மூலம் வீதி விளக்குகளுக்காகப் பயன்படுத்தப்படும் 30 வீத மின்சாரத்தை சேமிக்க முடியுமென அமைச்சர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கட்சியிலிருந்து விலகியவர்கள் மீள இணைந்துகொள்ள முடியும்

## ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார



(கொழும்பு)

கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்கள் மீளவும் இணைந்து கொள்ள முடியும் என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சியை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் இணைந்து கொள்ள கதவுகள் திறந்தே இருக்கும்.

சிலரின் ஏமாற்று வார்த்தைகளினால் கட்சியை விட்டு விலகிச் சென்றனர். இவர்களில் பலர் எம்மோடு மீள இணைந்து கொள்வார்கள் என நம்புகின்றோம். மீண்டும் கட்சியில் இணைந்து கொண்டு முன்னரைப் போன்றே கடமைகளை மேற்கொள்ள முடியும். ஒரு சிலர் கட்சியை சீர்குலைக்க வேண்டும் என்ற காரணத்தினால் இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# வாழைத் தண்டின் மகத்துவம்



சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்களால் துன்பப்படுகிறவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. உடலில் உள்ள கழிவுகள் சிறுநீர் மூலம் வெளியேற்றப்படுகின்றது. சிறுநீரைக் கட்டுப்படுத்துவதாலோ அல்லது நோய்ப் பாதிப்புகளாலோ சிறுநீர் சரிவர உடலை விட்டு வெளியேறாமல் இருக்குமானால் அது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். சிறுநீரகத்தில் கல் உருவாவது இன்று மிகப் பரவலாகக் காணப்படும் நோய்.

அதிக காரமான உணவு, மிகக் குறைவாக நீர் அருந்துதல், வறட்சியான உணவு, மது அருந்தும் பழக்கம், அடிக்கடி சிறுநீரை அடக்குதல் போன்ற காரணங்களால் சிறுநீர் தடைப் பட்டு சிறுநீரகத்தில் கற்கள் உண்டாகின்றது. சிறுநீரகக் கற்களை வெளியேற்ற மருநதுகளும், மருத்துவ முறைகளும் இருந்தாலும் நாம் உட்கொள்ளும் உணவு மூலமும் சிறுநரக கற்களை வெளியேற்றலாம்.

வாழைத் தண்டுக்கு சிறுநீரகக் கற்களை வெளியேற்றும் தன்மை உண்டு. வாழைத் தண்டை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால் ஆரம்ப நிலையில் உள்ள கற்களை மிக எளிதாகக் கரைத்து விடலாம். சிறுநீரக கற்கள் உள்ளவர்கள் வாழைத் தண்டை வாரம் மூன்று முறை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். வாழைத்தண்டு நார்ச்சத்து மிக்க உணவாதலால் அதிக உடல் எடையால் அவதிப்படுகிறவர்கள், நீரிழிவு நோயாளிகள், இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகரித்து இருப்பவர்களுக்கு இது மிகச் சிறந்த மருந்து. இது இரத்தத்தை தூய்மை செய்யும் இயல்புடையது.

உடலைக் குளிர்ச்சியடைய வைக்கும் தன்மையிருப்பதால் கோடை காலத்திற்கு மிகவும் ஏற்றது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும் சக்தி இருக்கிறது. உடல் எடை குறைய உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்பவர்கள் வாழைத்தண்டை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# நத்தைகளின் ஓட்டப்போட்டி

நத்தைகளைப் பயன்படுத்தி இடம்பெற்ற ஓட்டப்போட்டியொன்று பிரான்சில் லகாடர் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வொரு வருடமும் இவ் நத்தை ஓட்டப்போட்டி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இறுதியாக இவ்வருடம் 43ஆவது தடவையாக இப்போட்டி இடம்பெற்றுள்ளது.



இங்கு பெரியதோர் வட்டப்பலகை வைக்கப் பட்டு அதனுள் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ளும் நத்தைகள் அப்பலகையில் வைக்கப்பட்டன. எந்த நத்தை முதன் முதலில் வட்டப்பலகையின் விளிம்பை அடைகிறதோ அந்த நத்தை வெற்றியடைந்ததாக கருதப்படும்.



இப்போட்டியில் தோல்வியுறும் நத்தைகள் பிரான்சில் நத்தைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் எஸ்கா கோனம் எனும் உணவிற்காக பயன்படுத்தும். அதேவேளை போட்டியில் வெற்றி பெறும் நத்தை அடுத்த வருட போட்டிக்காகத் தயார்படுத்தப்படும்.


# பீரங்கிக் குண்டுப் பழம்



தென்னமெரிக்க கண்டத்தில் வளர்கின்ற அதிசய மரங்களில் ஒன்றுதான் பீரங்கிக் குண்டு மரம். இம்மரம் இந்தியாவிலும் வளர்கின்றது என அண்மைய காலங்களில் கண்டறியப்பட்டு உள்ளது. இம்மரத்தின் பழங்கள் தோற்றத்தில் பீரங்கிக் குண்டுகள் போல காட்சி தருகின்றன. இப்பழங்கள் மரத்தில் இருந்து எந்நேரமும் விழக்கூடும். பருவ காலத்தில் ஒரு மரத்தில் 300 பழங்கள் வரை தொங்கும். ஒரு பழத்தின் விட்டம் 24 சென்ரி மீற்றர். தென்னையில் இருந்து விழுகின்ற தேங்காய் தலையில் படுகின்றபோது எப்படி இருக்கும்?' பீரங்கிக் குண்டுப் பழம் தலையில் விழுகின்றபோதும் அதே கதிதான். இதனால் இம்மரங்களுக்கு கீழ் முன்னெச்சரிக்கை அறிவித்தல் பலகை வைக்கப்பட்டு இருக்கின்றது.



# விற்பனைக்கு வருகிறது



உலகின் மிகவும் பழமைவாய்ந்ததும் தற்போதும் பாவனையிலுள்ளதுமான கார் ஒன்று ஏல விற்பனைக்காக வந்துள்ளது. La Marquise என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கார் 1.6 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களுக்கு விற்கப்படலாமென எதிர்பார்கப்படுகின்றது. 127 வருடங்கள் பழமைவாய்ந்த நீராவியின் மூலம் இயங்கும் இந்தக் கார் 1881 ஆம் ஆண்டு பிரான்சில் தயாரிக்கப் பட்டது.

ஒன்பது அடி நீளமும் 2,100 பவுண்ட்ஸ் எடையுமுடைய இந்த கார் மணிக்கு 38 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. வாகனத்தை செலுத்துவதற்கு தேவையான நீராவியை 45 நிமிடங்களில் இது உற்பத்திசெய்து விடும். மேலும் இதன் மெல்லிய உலோகச் சக்கரங்கள் திடமான இறப்பர் கொண்டு சுற்றப்பட்டுள்ளன.

1914 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின்போது இந்தக் கார் சேதமடைந்தாலும், 1987 ஆம் ஆண்டு பிரித்தானியாவைச் சேர்ந்த Tim Moore என்பவரினால் அது மீண்டும் உபயோகிக்கத்தக்கவகையில் திருத்தியமைக்கப்பட்டது.

# பேஸ்புக்கில் Subscribe வசதியைப் பயன்படுத்துவதற்கு

பேஸ்புக்கில் Subscribe வசதியைப் பயன்படுத்துவதற்கு [ ஞாயிற்றுக்கிழமை, 25 செப்ரெம்பர் 2011, 06:13.10 மு.ப GMT ] பேஸ்புக் (Facebook) நிறுவனம் தனது உறுப்பினர்களைத் தக்க வைக்க புத்தம் புதிய வசதிகளை அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்கிறது. நாம் இப்போது பார்க்கப் போவது Subscribe வசதியைப் பற்றி. Subscribe என்றால் குறிப்பிட்ட நண்பர்கள் நமக்குப் பிடித்திருந்தால் நாம் அவர்களுக்கு நண்பராகச் சேரப்போவது இல்லை. அவர்களது பப்ளிக் (Public) செய்திகள்/ அப்டேட்கள் மட்டும் நமக்குத் தெரிந்தால் போதும். இதனால் Friend Request கொடுத்து தொல்லை செய்யத் தேவையில்லை. சப்ஸ்கிரைப் செய்வதன் மூலம் அவர்களின் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும். பிரபலமானவர்கள், சினிமா நட்சத்திரங்கள் போன்ற உங்களுக்குத் தெரியாத நபர்களின் அப்டேட்களை நாமும் பெற இந்த வசதி உதவுகிறது. இதறகு அவர்களின் புரோபைல் பக்கத்தில் சென்று Subscribe செய்தால் போதுமானது. இந்த வசதி Twitter இன் Following வசதி மற்றும் கூகிள் பிளஸின் Add to circles வசதியை ஒத்ததாக எடுத்துக் கொள்ளலாம். இதில் அவர்கள் Public என்று வெளியிடுகிற செய்திகளை மட்டுமே பார்த்துக் கொள்ள முடியும். சரி இந்த வசதியை நமது புரொபைலுக்கு ஆக்டிவேட் செய்வது எப்படி என்று பார்ப்போம். கீழுள்ள சுட்டியைக் கிளிக் செய்து பேஸ்புக்கின் சப்ஸ்கிரைப் பக்கத்திற்கு சென்று அதில் Allow Subscribers என்ற பட்டனைக் கிளிக் செய்யுங்கள் http://www.facebook.com/about/subscriptions mLj;J Subscribe Settings பக்கம் வரும். இதில் மூன்று அமைப்புகள் உள்ளன. 1.யாரெல்லாம் உங்கள் செய்திக்கு கமெண்ட் போடலாம் என்பது. (who can comment) 2.யாருடைய ஆக்டிவிட்டிகள் எல்லாம் உங்களுக்குத் தெரிவிப்பது என்பது.(Notification) 3.நண்பர்களுடைய நண்பர்கள் அதிகமாக நமக்கு Friend Request கொடுக்காமலிருக்க வழி செய்தல். மேற்கண்ட அமைப்புகளை அமைத்து விட்டு ஓகே பட்டனைக் கிளிக் செய்தால் உங்களுக்கான Subscribe வசதி ஆக்டிவேட் செய்யப் படும். இதன் பின் உங்கள் செய்திகளைப் பின் தொடர நினைக்கும் நண்பர்கள் Subscribe பட்டனைக் கிளிக் செய்து கொண்டால் நீங்கள் பப்ளிக்காக வெளியிடும் செய்திகள் அவர்களுக்கு சென்று சேரும். அடுத்து நாம் அடுத்தவரின் Subscribe வசதியைக் கிளிக் செய்து சேரும் போதே எந்த மாதிரியான அப்டேட்கள் மட்டுமே வேண்டும் என முடிவு செய்து கொள்ளலாம். All Updates, Most Updates, Only Important போன்ற வகைகளில் எதேனும் ஒன்றை தேர்வு செய்யலாம். அதே போல அப்டேட் செய்யப்படும் செய்திகளைப் பொறுத்து /பேஸ்புக் வகைப்படுத்தியிருக்கிறது. Status, Photos, Comments, Activites, Likes போன்றவற்றில் வேண்டாதவற்றைத் தவிர்க்கலாம் அல்லது உங்களுக்குப் பிடித்த மானவற்றை வைத்துக் கொள்ளலாம். இந்த மாதிரி Subscribe Option களை விரும்பியவாறு தேர்வு செய்து கொள்வதன் மூலம் அடுத்தவர்களின் அத்தனை செய்திகளும் வராமல் கட்டுப்படுத்தலாம். பிடிக்கவில்லை என்றால் Unsubscribe செய்து கொள்ளுங்கள்.

கணினி மூலை


# காளான் உருவில் கற்கள்



பல்கேரியா நாட்டில் அழகான, அற்புதமான இயற்கைத் தோற்றங்கள் பலவற்றைக் காண முடிகின்றது. அவற்றுள் சில மிகவும் விசித்திரமானவை. இவ்விசித்திரமான தோற்றப்பாடுகளில் ஒன்றுதான் காளான் வடிவத்திலான இராட்சத கற்கள். இக்கற்கள் Beli Plast என்கிற இடத்தில் அமையப் பெற்று உள்ளன. இவை அடிப்படையில் வெள்ளைச் சுண்ணாம்புக் கற்கள். மூன்று மீற்றர் வரை உயரம் உடையவை. இவை இவ்வடிவத்தைப் பெறுவதற்கு பல்லாயிரம் வருடங்கள் எடுத்து இருக்கின்றன. இக்கற்கள் குறித்து பல விதமான நம்பிக் கைகள் அந்நாட்டு மக்கள் மத்தியில் நின்று நிலவி வருகின்றன. கொடுங்கோலன் ஒருவரின் பிடியில் இருந்து தப்பி ஓடியபோது நான்கு சகோதரிகள் மீண்டும் பிடிக்கப்பட்டு அவர்களின் தலைகள் வெட்டப்பட்டன என்றும் அத்தலைகள்தான் இப்பாறைகள் என்றும் சுவாரஷியமான கதை ஒன்று கூறுகின்றது. ஆனால் இக் கதையை இன்று எவரும் நம்புகின்றார்கள் இல்லை. இருப்பினும் இக்கற்கள் குறித்த மர்மம் தொடர்ந்தும் நீடிக்கவே செய்கின்றது. பெருக்கெடுத்து வந்த நீரப் பாறைகளை அரித்து இவ்வடிவத்துக்கு கொண்டு வந்து இருக்கின்றது. தண்ணீர் இன்று இப்பகுதியில் இல்லை. கற்கள் தொடர்ந்தும் காளான் வடிவத்திலேயே உள்ளன.

# இந்தியச் செய்திகள்

## அத்துமீறிய சீன இராணுவம் குறித்து உள்துறை அமைச்சிற்கு அறிக்கை



(புதுடில்லி)

இந்திய எல்லைக்குள் அத்துமீறி ஊடுருவிய சீன இராணுவத்தின் நடவடிக்கை குறித்து ஜம்மு கஷ்மீர் அரசும், மத்திய பாதுகாப்பு ஏஜன்சியும் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அறிக்கை அனுப்பியுள்ளது.

கஷ்மீரின் லடாக் பகுதியில் கடந்த மாத இறுதியில் சீனா இராணுவம் அத்து மீறி நுழைந்து அங்கிருந்த பாறை ஒன்றில் சிவப்பு ஸ்டார் இலச்சினையை எழுதி விட்டுச் சென்றதாக செய்திகள் வெளியாகின. மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இதை மறுத்திருந்தது.


மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணாவும், இந்திய - சீன எல்லை அமைதியாக உள்ளது. ஏனைய நாடுகளுடன் உள்ள பிற எல்லைகளை ஒப்பிடும் போது இந்த எல்லை அமைதியாக இருக்கிறது, எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார். ஆனால் மத்திய பாதுகாப்பு அமைச்சகமோ இந்தச் செயல் மிக ஆபத்தானது என எச்சரித்தது.

இந்நிலையில் ஜம்மு கஷ்மீர் மாநில அரசும், மத்திய பாதுகாப்பு ஏஜன்சியும் இது பற்றி விரிவாக ஆய்வு நடத்தி அறிக்கை ஒன்றை மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்தது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த மாதம் 25ஆம் திகதி லடாக் எல்லையில் லேயின் வடகிழக்கே சிட்டகாங் பகுதியில் சுமர் என்ற இடத்தில் சீனாவைச் சேர்ந்த இரண்டு ஹெலிகொப்டர்கள் ஊடுருவி ஒன்றரை கி.மீ தூரத்திற்கு வந்து இறங்கியுள்ளன.

அதில் சீன இராணுவத்தைச் சேர்ந்த 12 வீரர்கள் இருந்துள்ளனர். அங்குள்ள நம் வீரர்கள் தங்கள் பயன்படும் கூடாரங்களையும், அங்கு அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகளையும் அழித்துள்ளனர்.

மேலும் அங்கிருந்த பாறை ஒன்றில் சீன இராணுவத்தைக் குறிக்கும் சிவப்பு நட்சத்திர முத்திரையை பெயின்டால் எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். குறிப்பாக அந்தப் பகுதி சீனாவைச் சேர்ந்தது என்பதை குறிக்கும் வகையில் 81 என்று குறிப்பிட்டு எழுதி வைத்துள்ளனர். அது சீன மக்கள் விடுதலை இராணுவத்தைக் குறிப்பதாகும். சீன இராணுவ வீரர்கள் பயன்படுத்திய வெற்றுச் சிகரெட் பெட்டிகள் அப்பகுதியில் சிதறிக் கிடந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்மோகன் சிங்கிற்கு எதிராக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்




(நியூயோர்க்)

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில், பிரதமர் மன்மோகன் சிங் பேசிய போது ஐ.நா. தலைமையகத்தின் வெளியே நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 1984இல், அப்போதைய பிரதமர் இந்திரா கொலை செய்யப்பட்டதை அடுத்து தலைநகர் டில்லியில் சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் நடந்தது. அதில் தற்போதைய கிராமப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் கமல்நாத்துக்குத் தொடர்பிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில், பிரதமர் மன்மோகன் சிங் உரையாற்றியபோது தலைமையகத்தின் வெளியே "சீக்கியர்களுக்கான நீதி கேட்கும் அமைப்பு" சார்பில் மத்திய அமைச்சர் கமல்நாத்தை பதவியில் இருந்து விலக்கக் கோரி சீக்கியர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதுகுறித்துப் பேசிய அந்த அமைப்பின் சட்ட ஆலோசகர் குர்பத்வான்த் பன்னுன் சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் ஈடுபட்டவர்களை தண்டிப்பதற்குத் தவறிய மன்மோகன் அரசு அவர்களுக்கு மத்திய அமைச்சர் பதவியைக் கொடுக்கிறது என்றார்.

## அணு ஆயுதத்தினை ஏந்திச் செல்லும் பிரிதிவி 2 ஏவுகணை சோதனை வெற்றி



(புதுடில்லி)

அணு ஆயுதங்களுடன் பாய்ந்து சென்று இலக்கை தாக்க கூடிய பிரிதிவி-2 ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்திய இராணுவத்துக்குத் தேவையான ஏவுகணையை உள்நாட்டு தொழில் நுட்பத்தில் இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் (டி.ஆர்.டி.ஓ.) உருவாக்கி வருகிறது. நீர்மூழ்கி கப்பல்களில் பயன்படுத்தப்படும் சகாரிகா ஏவுகணையை இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் கடந்த 9 மாதங்களுக்கு முன்பு வெற்றிகரமாகச் சோதனை செய்தது.

இதையடுத்து 350 கி.மீ. தூரம் வரை சென்று தரைப்பகுதியைத் தாக்கக் கூடிய புதிய பிரிதிவி-2 ஏவுகணையை விஞ்ஞானிகள் உருவாக்கினர். இது அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் வல்லமை படைத்தது ஆகும்.

இந்த ஏவுகணை சோதனைக்காக ஒரிசாவில் உள்ள பலசோர் ஏவுகணை தளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு வைத்து நேற்றுக் காலை 8.50 மணி அளவில், இலக்காக நோக்கி ஏவி சோதித்துப் பார்க்கப்பட்டது. இந்த ஏவுகணை தரைப்பகுதியை இலக்காக கொண்டு வெற்றிகரமாகச் சென்று தாக்கி அழித்தது.

இதை இராணுவ ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் நூற்றுக்கணக்கானோர் பார்வையிட்டனர். ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக நடந்ததை அடுத்து, விஞ்ஞானிகள் ஒருவருக்கு ஒருவர் கை குலுக்கி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். பிரிதிவி-2 ஏவுகணை 9 மீற்றர் நீளமும், ஒரு மீற்றர் சுற்றளவும் கொண்டது ஆகும்.

## வறுமைக்குட்பட்டோர் இந்தியாவில் 40 கோடி

(புதுடில்லி)

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது வறுமைக்கோட்டுக்கு கீழ் இருந்தவர்களின் எண்ணிக்கை, 32 கோடியாக இருந்தது. தற்போது இந்த எண்ணிக்கை, 40 கோடியாக உயர்ந்துள்ளது, எனத் தேசிய ஆலோசனை சபை உறுப்பினர் என்.சி.சக்சேனா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 70 சதவீதம் என, பொருளாதார நிபுணர் அர்ஜுன் சென்குப்தாவும், 50 சதவீதம் பேர் என, என்.சி.சக்சேனாவும், 37.5 சதவீதம் என, பொருளாதார வல்லுனர் சுரேஷ் டெண்டுல்கரும் தெரிவித்துள்ளனர்.

நகர் புறங்களில் மாதம் 965 ரூபா வருவாய் ஈட்டுபவர்கள் மற்றும் கிராம புறங்களில் மாதம் 781 ரூபா வருவாய் ஈட்டுபவர்களை ஏழைகளாக கருதக்கூடாது. அவர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்டங்களையும் இரத்து செய்ய வேண்டும் என, அண்மையில் உயர் நீதிமன்ற திட்ட கமிஷன் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், காங்கிரஸ் தலைவர் சோனியா தலைமையிலான தேசிய ஆலோசனை கவுன்சிலில் உறுப்பினராகவும், திட்டக்கமிஷனர் செயலராகவும் உள்ள என்.சி.சக்சேனா இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

## சோனாவுக்கு நீதி கிட்டும்வரை பெண்கள் அமைப்பு போராடும்

(சென்னை)

மங்காத்தா விருந்தில் கலந்து கொண்ட சோனாவுக்கு, பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எஸ்.பி.பி.சரண் வீட்டு முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்தப்போவதாக பெண்கள் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

மங்காத்தா படத்தின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் நடிகர் வைபவ், தனது வீட்டில் மது விருந்துக்கு ஏற்பாடு செய்தார்.

இந்த விருந்தில் இயக்குநர் வெங்கட்பிரபு, நடிகை சோனா, தயாரிப்பாளரும், பாடகருமான எஸ்.பி.பி.சரண் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விருந்தில், சரண் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார் என்று சோனா, சென்னை பாண்டி பஜார் பொலிஸில் புகார் கொடுத்தார். மேலும் அதற்கான வீடியோ ஆதாரத்தையும் கொடுத்துள்ளார். இந்த வழக்குத் தொடர்பாக சரண் இரண்டு வார காலத்திற்கு பிணை பெற்றுள்ளார். இதனிடையே சரணுக்கும், சோனாவுக்கும் இடையே சமரசப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.



இந்நிலையில் நடிகை சோனாவுக்கு ஆதரவு தெரிவித்து சரண் வீட்டு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக ஜான்சி ராணி என்ற பெண்கள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த சங்கத்தின் தலைவி கல்பனா வெளியிட்டுள்ள அறிக்கையில், சோனா ஒரு நடிகையாக இருக்கலாம். அதேசமயம் அவரும் ஒரு பெண். சோனாவை, சரண் ஆபாசமாகத் திட்டியது, பாலியல் தொல்லை கொடுத்தது போன்றவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அவருக்கும் தன்மானம் உள்ளது.

பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பார்த்து நாங்கள் பேசாமல் இருக்கமாட்டோம் எனவே சரண் வீட்டு முன்பு எங்கள் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் முற்றுகை போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம். சோனாவுக்கு நீதி கிடைக்கும் வரை எங்களது போராட்டம் தொடரும் என்று கூறியுள்ளார்.





தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்







பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# அமெரிக்காவுக்கு எதிரான கருத்து ரப்பானிகரை நாடு திரும்ப உத்தரவு

## பாகிஸ்தான் பிரதமர் அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவுக்கு எதிரான கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினா ரப்பானி கரை கண்டித்து உடனடியாக அவரைநாடு திரும்புமாறு அந்நாட்டுப் பிரதமர் உத்தர விட்டுள்ளார்.

இது இரு நாட்டு உறவில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. தற்போது அமெரிக்கா நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.சபை தலைமை அலுவலகத்தில் பொதுச்சபை கூட்டம் நடக்கிறது.

அதில் பங்கேற்க இருந்த பாகிஸ தான் பிரதமர் கிலானி அமெரிக்க அதிபர் ஒபாமாவைச் சந்திக்க விருப்பம் தெரிவித்து இருந்தார். ஆனால் அவரைச் சந்திக்க ஒபாமா விரும்பவில்லை. எனவே வெள்ள நிவாரணப் பணிகளை மேற் பார்வையிட இருப்பதாக கூறி பிரதமர் தனது பிரதிநிதியாக வெளியுறவு மந்திரி ஹினா ரப்பானி கரை அனுப்பி வைத்தார். கூட்டத்தில் பங்கேற்க சென்ற அவர் அமெரிக்காவுக்கு எதிரான கடுமையான கருத்துகளை தெரிவித்தார். இதன் மூலம் பாகிஸ்தானை அமெரிக்காவின் வெறுப்புக்கு உட்படுத்தி விட்டார். இது பிரதமர் கிலானிக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ஹினா ரப்பானி கர் கருத்தில் அவருக்கு உடன்பாடும் இல்லை. எனவே அமெரிக்காவுக்கு எதிரான கருத்து கூறிய தற்காக அவருக்கு கண்டனம் தெரிவித்தார். மேலும் அவர் வெளியுறவு மந்திரி ரப்பானி உடனடியாக நாடு திரும்ப உத்தர விட்டுள்ளார்.

## ஈராக்கில் குண்டுவெடிப்பு 12 பேர் பலி, 100 பேர் காயம்



(ஜதராபாத்)

ஈராக்கின் கர்பாலா நகரில் நிகழ்ந்த தொடர் கார்க் குண்டு வெடிப்புகளில் 12 பேர் பலியாகியுள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஈராக்கின் தலைநகர் பாக்தாத் நகரில் 90 கி.மீ தொலைவில் உள்ள கர்பாலா நகரில் அரசு கட்டடம் ஒன்று உள்ளது.

இங்கு நிறுத்தப்பட்டிருந்த காரின் மூலம் வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. இதைத் தொடரந்து அருகே உள்ள பொலிஸ் நிலையத்திலும் இருமுறை வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது குறிப்பிடத்தக்கது.

## சவுதி அரேபியாவில் பெண்களுக்கும் வாக்குரிமை



(ரியாத்)

சவுதிஅரேபியாவில் முதன் முறையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில் பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. அங்கு பெண்கள் வாக்குப் போடுவதற்கும் உரிமை இல்லை.

இந்த நிலையில் சவுதி அரேபியாவில் வாழும் பெண்கள் 4 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற உள்ள நகரசபைத் தேர்தலில் போட்டியிடவும், வாக்குப் போடவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்பை சவுதி அரேபியா மன்னர் அப்துல்லா (87) நேற்று முன்தினம் அறிவித்தார். அப்போது அடுத்து நடைபெற உள்ள நகராட்சி கவுன்சிலர்கள் தேர்தலில் (ஷீரா) பெண்களையும் பங்குபெறச் செய்ய முடிவு செய்துள்ளோம் என அறிவித்தார்.

## யூரோ மண்டலத்தின் கடன் நெருக்கடி சர்வதேச நிதியமைப்பிடம் பணமில்லை

### ஐ.எம்.எப்.தலைவர்

(அமெரிக்கா)

யூரோ மண்டலத்தின் கடன் நெருக்கடி பிற நாடுகளுக்கும் பரவும் பட்சத்தில் அவற்றுக்கு கடன் தவணைகள் அளிப்பதற்கான பணம் சர்வதேச நிதியமைப்பிடம் இல்லை என கிறிஸ்டைன் லகார்ட் தெரிவித்துள்ளார்.

யூரோ நாணயம் பயன்படுத்தும் 17 நாடுகளில் தற்போது கிரீஸ் எந்நேரமும் திவாலாகலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது அமெரிக்கா, ஐரோப்பா தலைவர்களிடம் கிரிசை திவால் ஆவதில் இருந்து மீட்பதற்கு எவ்வித யோசனையும் இல்லை.

இந்நிலையில் அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் உள்ள ஐ.எம்.எப் தலைமையகத்தில் இரு நாட்களாக உலக நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடந்தது.

மீண்டும் ஒரு பொருளாதார மந்தம் வராமல் தடுப்பது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இதுகுறித்து பேட்டியளித்த ஐ.எம்.எப் தலைவர் கிறிஸ்டைன் லகார்ட், ஐ.எம்.எப். பிடம் தற்போது உள்ள பணம் தற்போதைய பிரச்சினைகளை சமாளிக்க போதுமானது தான். ஆனால் இந்தக் கடன் நெருக்கடி பிற நாடுகளுக்கும் பரவும் பட்சத்தில் அவற்றுக்கு கடன் தவணைகள் அளிக்க ஐ.எம்.எப். பிடம் பணம் இல்லை எனத் தெரிவித்தார்.

## தனது அணுசக்தி ரகசியங்களை அம்பலப்படுத்தியது பாகிஸ்தான்

பாகிஸ்தான் தனது அணுசக்தி ரகசியங்களை ஈரான் மற்றும் லிபியா போன்ற நாடுகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளது.மேலும் அந்த ரகசியங்களைப் பெறுவதற்காக லிபியா கொடுத்த ஐந்து மில்லியன் டொலர் பணம் இந்தியா, சிங்கப்பூர் வழியாக பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இயங்கி வரும் பாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனம் ஐ.எஸ்.ஐ.யின் சில ஆவணங்களை வெளியிட்டுள்ளது. அந்த ஆவணங்களில் பாகிஸ்தானின் பிரபல அணு சக்தி விஞ்ஞானியான அப்துல் காதிர் கான் 2004 இல் நாட்டின் விஞ்ஞான ரகசியங்களை ஈரான், ஈராக், வட கொரியா, லிபியா ஆகிய வெளி நாடுகளுக்கு கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டார்.

இதற்கான ஆதாரங்களை அமெரிக்கா அப்போது வெளியிட்டிருந்தது. தொடர்ந்த விசாரணையில் 2009 இல் கான் மீதான குற்றச்சாட்டுகளை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் நிராகரித்து அவரை வழக்கில் இருந்து விடுவித்தது.

இவ்வழக்கில் நடந்து கொண்டிருந்த போது ஐ.எஸ்.ஐ அதிகாரிகள் கானை நேரில் அழைத்து விசாரித்ததாக செய்திகள் வெளியாயின. ஆனால் அப்போது அதை அதிகாரிகள் மறுத்தனர்.

இதையடுத்து அத்தகைய ஆதாரங்கள் மேற்கத்திய நாடுகளின் உளவுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டன. அவற்றில் சிலவற்றைத் தான் தற்போது பாக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

## பதிவிறக்கப் பெட்டகம்

எஸ். ராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதை கள்" தொகுப்பிலிருந்து...

### மனிதர்கள் எப்படித் தோன்றினார்கள்?

ஆபிரிக்க முதுகடவுள் வயிற்றில் இருந்துதான் உலகம் முழுவதும் உருவாக்கப்பட்டது. கடவுள் வாந்தி எடுத்தபோது அதன் வாயிலிருந்து மரங்களும், வானமும், கடலும், மிருகங்களும், பறவைகளும் உருவாயின. ஆனால், மனிதர்கள் உருவாகவில்லை. கடவுள் தன் மனதிலிருந்த சில சொற்களை வாய்வழியாகத் துப்பியபோது அந்தச் சொற்கள் ஒன்றுசேர்ந்து ஒரு உடல் ஆகியது. அந்த உடலிலிருந்துதான் மனிதர்கள் உற்பத்தி ஆனார்கள். அதனால்தான் மனிதர்களுக்கு மட்டும் பேசும் சக்தி இருக்கிறது. –ஆபிரிக்கா

### கடலும் நிலமும் எப்படிப் பிரிந்தன?

ஆதியிலேயே உலகமெங்கும் கடலே நிரம்பி இருந்தது. பூமி நீருக்குள் மூழ்கிக் கிடந்தது. நிலத்தை நீரில் இருந்து பிரித்தெடுக்க கடவுள் சிந்தனை செய்தார். இதற்காக முதலில் நண்டை நீருக்குள் சென்று கொஞ்சம் மண் எடுத்து வரச் சொன்னார். நண்டு தன் இரு கொடுக்குகளால் மண்ணைக் கவ்விக் கொண்டு தண்ணீரில் மேலே வர முயன்றது. அது மேலே வரும் முன்பாகவே மண் கரைந்துபோய் நண்டு தோற்றுப் போனது. கடவுள் இதனால் ஆமையை மண் எடுத்து வரச் சொன்னார். அது தன் முதுகில் மண் குவியலைச் சுமந்தபடி மேலே வந்த போது அலையில் மண் கரைந்துபோனது.

இதைக் கண்ட கடவுள் மண்புழுவை அழைத்தார். "நான் நண்டையும் ஆமையையும் மண் கொண்டுவரச் சொன்னேன். அவர்களால் ஒரு துளி மண்கூடக் கொண்டுவர முடியவில்லை. நீ கவனமாகக் கொண்டு வா" என்றார். மண்புழு நீரினுள் சென்று அடி மண்ணை வாயில் நிரப்பிக்கொண்டு நெளிந்து நெளிந்து மேலே வந்தது.

கடவுள், "மண்புழுவே, மண்புழுவே மண் எங்கே?" என்று கேட்டார். "இதோ மண்" என தன் வாயிலிருந்து உமிழ்ந்தது.

"நீ இனிமேல் மண்ணுக்குரியவன்" என கடவுள் அதை வாழ்த்தினார். இப்படி மண்புழுக்களால் விரைவாக மண்ணை நீரிலிருந்து கடவுள் பிரித்து மரங்களும், செடிகளும், விலங்குகளும் உண்டாக்கினார். இதனாலே கடலும் நிலமும் இரண்டாகப் பிரிந்தது. –சோட்டா நாகபுரி

### இலைகளுக்கு எப்படி நிறம் உண்டானது?

அந்தக் காலத்தில் உலகிலேயே மிக அழகாக இருந்தது வானவில் ஒன்றுதான். அது ஒரு பறக்கும் பாலமாக இருந்தது. பூமிக்கும் வானத்திற்கும் இடையில் இருந்த அந்தப் பாலத்தின் வழியாகக் கடவுள் நடந்து வருவார். பூமியில் இருந்த மரஞ் செடி கொடிகளின் இலைகள் அப்போது நிறமில்லாமல் இருந்தன. அதைக் கண்ட ஒரு மான் வானவில்லில் இருந்து கொஞ்சம் நிறத்தை தான் கொண்டு வருவதாகச் சொல்லி ஆகாயத்திற்குச் சென்றது. வானவில் பாலத்தின் காவற்காரனான கரடி, மானை உள்ளே விட மறுத்தது. இரண்டிற்கும் சண்டை நடந்தது. கரடியை மான் தன் கொம்பால் குத்திவிடவே கரடி பாலத்தின் மீது விழுந்து வானவில்லின் முனையை உடைத்தது. அதிலிருந்து சிதறிய நிறங்கள்தான் இலைகளுக்குப் புதுப்புது வர்ணமாக உருக்கொண்டன. – மெக்ஸிகோ

### மூங்கில் எதனால் பாடுகிறது?

உலகம் உண்டானபோது கடலும் ஆகாயமும் மட்டுமே இருந்தது. பூமி தோன்றவே இல்லை. கடலிலிருந்து வரும் காற்றும் ஆகாயத்திலிருந்து வரும் காற்றும் சுற்றிக்கொண்டே வெவ்வேறு இடங்களிலிருந்தன. கடல் காற்றும் ஆகாயத்தில் இருந்த காற்றும் சேர்ந்து கல்யாணம் செய்துகொண்டன. அவர்களுக்குப் பிறந்த குழந்தையின் பெயர்தான் மூங்கில். தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த மூங்கிலைக் கடல் பறவையொன்று தன் காலால் பறறிக்கொண்டு அது என்ன என்று பரிசோதிக்கத் தன் அலகால் குத்தியது. பறவையால் துளையிடப்பட்ட மூங்கிலில் காற்று புகுந்து வெளிவரும்போது அது ஒரு இன்னிசையாக மாறியது. அப்படித்தான் மூங்கில் பாடுகிறது. – கென்யா

### பூனை எலியை ஏன் துரத்துகிறது?

சீனா தேசத்தின் மாதங்களுக்குப் பெயரிடுவதற்காக புத்தர் விலங்குகளுக்குள் ஒரு ஓட்டப் பந்தயம் நடத்தினார். முதல் 12 இடங்களைப் பிடிக்கும் மிருகங்களின் பெயர் வரிசைப்படி மாதங்களுக்கு வைக்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி ஓட்டப் பந்தயம் தொடங்கியது. பந்தய மைதானத்தில் எலி தன் அருகிலிருந்த பூனையிடம் தனக்கு ஒரு குறுக்குப் பாதை தெரியும் என்றும் அதன் வழியாகப் போனால் மற்றவர்களை விட விரை வாகப் போய்விடலாம் என்றது. பூனையும் ஒத்துக்கொண்டது. வழி காட்டுவதற்காக எலி பூனையின் மீது ஏறிக்கொண்டு சென்றது.

பந்தயம் முடியும் இடத்திற்கு மற்றவர்களை விட முந்திவந்து சேர்ந்துவிட்டன. எலி தாங்கள் முதலில் போனால் புத்தர் தங்களது குறுக்கு வழியைக் கண்டுபிடித்துவிடுவார். அதனால் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துவிட்டுப் போகலாம் என்றது. பூனையும் அந்த இடத்தில் படுத்துக்கொண்டது. பூனை தூங்கியதும் எலி தாவிக் குதித்து போட்டியில் முதல் இடம் பெற்றுவிட்டது. போட்டி முடியும் போது பூனை கண்விழித்துப் பார்த்தது. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது. எலியைக் கோபத்துடன் விரட்டத் தொடங்கியது. அன்றிலிருந்து எலிக்குப் பூனை விரோதியானது.

– சீனா

# தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்கு புதுமுகவரி கொடுக்கப்படல் வேண்டும்

விடுதலைப்புலிகளின் இராணுவ ரீதியான தோல்வியின் பின்னர் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகளில் அரசாங்கம் பின்னடிப்புக்களை செய்து வருவதாகவும், அது தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றது என்ற கருத்தியலானது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடாக தமிழ் மக்களிடம் பரவலாக காணப்படுகின்றது. இக்கருத்தியல் உண்மைக்கு புறம்பானது என்று ஒதுக்கி விடமுடியாது. அதேநேரம் புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடர்ந்திருந்தால், புலிகள் தோற்கடிக்கப்படாமல் இருந்திருந்தால் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சி துரிதப்படுத்தப்பட்டு சிலவேளை தீர்வு பெறப்பட்டு தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்திருக்கலாம் என்ற கருத்தியல் முற்றிலும் தவறானது.

புலிகளின் ஆயுத ரீதியான தோல்வியின் பின்புதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகள் காத்திரமாக முன் நோக்கி நகர்வதற்கான வாய்ப்புகள் உள்ளதையும், எடுக்கப்படும் முயற்சிகள், தீர்வுகளின் ஊடாக கடந்த காலங்களைப் போல புலிகளின் ஆயுதப் போராட்டத்தை காரணம் காட்டி காலம் கடத்துவதோ, இழுத்தடிப்பு செய்ய முடியாது என்பதையும் புரிந்து கொளள வேண்டும். ஆயுதப் போராட்ட காலத்தில் அரசாங்கம் புலிகளையும், புலிகள் அரசாங்கத்தையும் காரணம் காட்டி மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற முடிந்தது. தமிழ் பேரினவாதத்திற்கு வலுவாக சிங்கள பேரினவாதமும் ஓங்கியிருந்தது. ஒரு முனை மௌனிக்கப்பட்ட பின் மறு முனையால் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது.

ஆனால் புலிகள் ஆயுதத்தின் ஊடாக கோரிய குறுந்தேசியம் மீண்டும் வேறு வழிகளில் முயற்சிக் கப்பட்டால் 'பழைய குருடி கதவை திறவடி' என்ற நிலைமைதான் ஏற்படும். புலிகளின் ஆயுதப்போராட்டத்தின் மூலம் கோரியதையோ, அதற்கு சமமானதையோ கேட்பது யதார்த்தத்திற்கு புறம்பானதும் நடைமுறைச் சாத்தியம் அற்றதும் கூட, புலிகளின் ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப் பட்டமை தமிழ் மக்களின் விமோசனத்திற்கான முதற்படி. இதனை உணர்நது உரிய முறையில் பயன்படுத்துவதில்தான் மக்களின் விடிவு காலம் தங்கியுள்ளது.

புலிகளின் ஆயுத முனையில் மௌனிக்கப்பட்ட தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரமானது புலிகள் தோற்கடிக்கப்பட்டபின் விசாலமாக மீண்டு எழவில்லை. பல விவாதப் பொருட்கள் இன்னும் பரவலாக விவாதிக்கப்படாமல், ஒரு சில கட்சிகளின் கருத்தாக மட்டுமே உள்ளது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு என்பது ஒரு கட்சியின் கொள்கையோ, முடிவோ அல்ல. அது மக்களின் உரிமைப் பிரச்சினை. வாக்களித்தவர்களின் அதிகமானோர் வாக்களித்தனர் என்பதற்காக ஒட்டு மொத்த மக்களின் அடிப்படை உரிமைப் பிரச்சினையை தீர்மானிக்கும் சக்தி கிடைத்ததாக கூற முடியாது. வாக்களிப்பு வீதம், வாக்களித்த மக்களின் அப்போதைய மனோநிலைமை, அக்காலப்பகுதிக்கான சூழல், எதிர்த்தரப்பு பலவீனங்கள் காரணமாக அமைந்தனவே தவிர வாக்களிப்பை மாத்திரம் கொண்டு ஒரு சமூகத்தின் சார்பான தலைவிதியைத் தீர்மானிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை இனப்பிரச்சினை தீர்வில் ஏமாற்றுகின்றது, காலத்தை கடத்துகின்றது என்பது ஆச்சரியப் படக் கூடிய விடயமல்ல. இத்தகைய அரசாங்கத்தின் இழுத்தடிப்புகளுக்கு தமிழர் தரப்பு எவ்வாறு ராஜதந்திரமாக காய்களை நகர்த்தி தொடர்ந்து இழுத்தடிக்காத வண்ணம் முட்டுக் கட்டை போட்டு தீர்வுக்கான வழிக்கு கொண்டு வருகின்றது என்பதுதான் [illegible] விடயமாகும். ஆனால் இன்றைய நிலையில் இனப்



பிரச்சினைத் தீர்வுக்கான இழுத்தடிப்புகளுக்கும் ஏமாற்றங்களுக்கும் வழி ஏற்படுத்திக் கொடுப்பதே தமிழ் கட்சிகள்தான். இதில் பெரும் பங்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சார்ந்தது.

ஓவ்வொரு கட்சிக்கும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் குறைந்தபட்ச அரசியல் தீர்வு விடயத்திலாவது அனைத்து தமிழ் கட்சிகளும் ஒருமித்த கருத்துக்கு வருவது முக்கியமானது. குறைந்த பட்ச அரசியல் தீர்வு விடயத்திலாவது இணக்கம் ஏற்படா விட்டால் அது பேரினவாதத்திற்கும் இழுத் தடிப்பு, ஏமாற்றங்களுக்கும் களம் அமைத்துவிடும்.

இலங்கை அரசுக்கு எதிரான போர்க் குறற விசாரணை, சர்வதேச தடைகள் போன்ற கோசங்கள் எல்லாம் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வுக் கான காத்திரமான பங்களிப்பை வழங்கப் போவது இல்லை. இலங்கை அரசுக்கெதிரான போர்க்குற்ற விசாரணை கோசத்தை பலவீனப் படுத்தியது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தான், எவ்வாறு எனில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரித்ததன் மூலம் யுத்த கால இராணுவத் தளபதியும், இராணுவமும் போர்க்குற்றம் புரியவில்லை என்பதை, அவருக்குப் பெற்றுக்கொடுத்த வாக்குகளின் ஊடாக TNA ஏற்றுக் கொண்டது, இராணுவத் தளபதியும், இராணுவமும் போர்க்குற்றம் புரியவில்லை என்றால் போர்க் குற்றம் புரிந்தது யார்? பாதுகாப்பு அமைச்சருமான ஜனாதிபதியும், பாதுகாப்பு செயலா . ளருமா? இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை கோச மானது இலங்கையை மேற்கத்திய நாடுகளிடம் மண்டியிட வைக்கும் முயற்சியே தவிர தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான முயற்சி அல்ல

அமெரிக்க, மேற்கத்திய நாடுகளன் கேந்திர நலனுக்கான களமாக இலங்கை மாறி விட்டால் போர்க்குறற கோசமானது புஸ்வாணம் ஆகிவீடும். முதலாளித்துவ மேலாதிக்க, பிராந்திய ஏகாதிபத்திய போட்டியில் இலங்கை முக்கியத்துவத்திற்காகவே போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் கோசங்களெல்லாம் எழுப்பப்படுகின்றது. இஸ்ரேல் மேற்கொளளாத மனித உரிமை மீறலா? அமெரிக்கா தனது நலனுக்காக இன்று வரை அதனைப் பாதுகாத்து வருகின்றது.

வியாபார ரீதியிலான ஒரு போராட்டத்தின் கருத்துக்களோ, செயற்பாடுகளோ மக்களின் இன்றைய தேவை அல்ல. புலிகளின் ஆயுத ரீதியான போராட்டமானது இறுதிக் கட்டத்தில் வணிகமயப்படுத்தப் பட்டதுதான் உண்மை. புலிகளின் போராட்ட சித்தாந்தங்களான தனி ஈழம், தியாகம், அர்ப்பணிப்பு போன்ற கோட்பாடுகள் புலிகளுக்குள்ளேயே தோற்கடிக்கப் பட்டது. இறுதிக்கட்டததில் புலிகளின் முக்கிய தலைவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான புலி உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தமை, முள்ளிவாய்க் காலுக்குப் பின்னர் இதுவரை ஒரு துப்பாக்கிச் சன்னமாவது வெடிக் காமை போன்றன புலிகளின் போராட்டம் உணர்வு ரீதியானது அல்ல என்பதை கட்டியம் கூறுகின்றது.

மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளை நன்கு உணர்ந்து வணிக ரீதியிலான போராட்டத்தின் குரலகளாக ஒலிப்பதை விட குறைந்த பட்ச தீர்வுக்காகவாவது அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட வேண் டிய காலம் இது. அவ்வாறு நோக்கின் காணி, நிர்வாக அதிகாரங்களுடனான மாகாண சபை முறைமை குறைந்த பட்ச தீர்வுக்கான சிறந்த தெரிவாகும். அண்மைய டெல்லி மாநாடு போல தமிழ் கடசிகள் மீண்டும் வார்த்தை ஜாலங்களுக்காகவோ, தென்னிலங்கை ஐயப்படும் சொற்பதங்களுக்காகவோ தங்களுக்குள் முரண்படு வதை தவிர்க்க வேண்டும். அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் இலங்கை அரசாங்கத்துடன் பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றென்பதை யும், இதில் இந்தியா உள்ளிட்ட சர்வ தேசத்தின் பங்கு தங்களின் பிராந்திய நலனை தாண்டி உதவாது என்பதை யும் அரசியல் கட்சிகளைத் தாண்டி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்காக ஊடகங்கள் நடுநிலையானவர்களின் கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

கொழும்பின் இராஜதந்திர அணுகுமுறையின் முன் தமிழர் தரப்பு எப்போதும் தோல்வியைச் சந்திததுள்ளது. 'கல் தோன்றா காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடி' என்று தம்மை புகழ்ந்துரைத்து சிங்கள மக்களை 'மோட்டுச்சிங்களவர்' என்று இகழ்ந்து உரைக்குழ் ஒரு தவறான போக்கு தமிழ் மேட்டுக்குடி அரசியல் மட்டத்தில் உண்டு. 'மோட்டுச்சிங்களவர்' என்ற கண்மூடித்தனமான வார்த்தையை பிரயோகிப்பவர்கள் உணரவேண்டிய உண்மை யாதெனில் ஒரு சிறிய பாக்கு நீரிணையால் பிரிக்கப்படுகின்ற இந்தியாவுக்குக் கீழ் அமைந்துள்ள சிறிய தீவான இலங்கை அந்தப் பிரமாண்டமான உபகண்டத்தின் பிடியில் அகப்பட்டு கரைந்து போகாமல் 2500 ஆண்டுகளுக்கு முன்னால் தப்பி ஓடி தமது அரச பண்பாடு, பாரம்பரியங்களுடன் வாழக்கூடிய திறமை சிங்கள சமூகத்தி டம் உண்டு. இந்தப் பிரமாண்டமான இந்தியாவால் வரலாறு தொட்டு இன்று வரை சிங்கள அரசையும் கலாசாரத்தையும் தோற்கடித்து தம்முடன் இணைக்க முடியவில்லை. மிகவும் இராஜதந்திரத்துடனும் புத்தி சாதுரியத்துடனும் இந்தியாவை பல நூற்றாண்டு காலமாக கையாண்டு வருவதில் சிங்களத் தலைமைகள் வெற்றி பெற்றுள்ளன. அதேபோன்று சர்வதேசத்தின் நாடித்துடிப்புக்கு ஏற்ப அது தனது இராஜதந்திர பாதைகளை மாற்றியமைத்து தனக்கு பக்க பலமாக ஏதோ ஒரு சக்தியை அழைத்துச் செல்கின்றது.

அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச போன்றோர் மூலம் தமிழருக்கு எதிரான இனவாதக்கருத்துகளை வெளிப்படுத்தும் அதே வேளை அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர போன்றோர் மூலம் தமிழ் மக்களுக்கு ஆதரவான கருத்துக் களை வெளியிடுகின்றது. மறு பக்கம் இந்தியாவையும் மேற்கத்திய சமூகத்தையும் சமாளிக்க அவசரகால சட்டத்தை நீக்கும் அதே வேளை அச்சட்டத்தில் உள்ள முக்கிய சரத்துக்களை மறைமுகமாக பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவர எத்தனிக்கின்றது.


எனவே இவ்வாறான தந்திர செயற்பாடுகள் கொண்ட சிங்கள அரச தலைமையுடன் அரசியல் ரீதியாக மோத முற்படும் தமிழ்த்தலைமைகள் தமது மக்களுக்கான குறைந்தபட்ச அரசியல் தீர்வு விடயத்திலாவது ஒன்றுபடாவிட்டால் கொழும்பிடம் இருந்து எதனையும் பெறமுடியாது. தமிழ் மக்களுக்கான தீர்வினை தங்கத் தட்டில் வைத்து தென்னிலங்கை சமூகம் தரப்போவது இல்லை. தமிழர் தரப்பிடம் காணப் படும் பலவீனங்களே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பெரும் முட்டுக்கட்டைகள் ஆகும்.

இவ்வாறான நிலைமையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தொடர்ந்தும் தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி எனும் தோற்றப்பாடு தமிழர் தரப்பின் பலவீனங்களின் ஒன்றாகவே இருக்கும். புலிகளின் நேரடி ஆதரவைப் பெற்று இருந்த, தமிழ் கடும் போக்காளர்களைக் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்தும் தேர்தல்களில் தமிழர்கள் பகுதியில் வெல்வது தென்னிலங்கை இராஜ தந்திரத்துக்கு உவப்பான விடயமே. இதற்கு மாற்றாக தமிழர் பிரச்சினையை யதார்த்தமாகவும் தமது தரப்பு பலவீனங்களை உணர்ந்து காலத்திற்கு ஏற்ப பயணிக்கக்கூடிய அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் இன்றைய உடனடித் தேவையாக உள்ளது. இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மாற்றீடாக வடக்கில் EPDP யும் கிழக்கில் TMVP யும் உள்ளன. ஆனால் இவ்விரு கட்சிகளும் ஆயுதக் குழுக்கள் எனும் பார்வையிலே நோக்கப் படுகின்றன. எனவே இக்கட்சிகள் தம்மிடையே சுய விமர்சனத்துடன் கட்சிக் கட்டமைப்பையும் மாற்றவேண்டும். படித்த யதார்த்தவாதிகளுக்கு இடம் வழங்க வேண்டும். அத்துடன் தம்மை முழுமையான ஜனநாயகக் கட்சிகள் என்று மக்களை உணரச்செய்வதிலே இவர்களின் எதிர்கால இருப்பும் தங்கியுள்ளது.

எனவே தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்வுக்குப் புதிய தலைமையின் கீழ் புது முகவரி கொடுக்க வேண்டிய காலகட்டம் மக்கள் முன் உள்ளது. தன்னாட்சி அதிகாரம், சுயாட்சி போன்ற தென்னிலங்கை விரும்பாத சொற்பதங்களை தவிர்த்து. தமது பலவீனங்களை உணர்ந்து மக்களின் நலனுக்காக குறைந்த பட்ச அரசியல் தீர்விலாவது ஒன்றுபட்டு அதனைப் பெற முயல வேண்டும்.

*எம்.எம்.எம்.ஹன்ஸீர்*

# செயற்கை அவயவங்கள் முகாம் 30 ஆம் திகதி வரை நீடிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய ஜெய்ப்பூர் நிறுவனத்தால் கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் நடத்தப்பட்டு வரும் செயற்கை அவயவங்கள் பொருத்தும் இலவச சேவை இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிககப்பட்டுள்ளது மேலும் தூர இடங்களில் இருந்து இச் சேவையைச் பொறுபவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் தேவை ஏற்பட்டால் ஒழுங்குசெய்து தரப்படும் என பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 3 ஆம் திகதி முதல் நேற்று வரை 650 பேர் செயற்கை அவயவங்கள் பொருத்தியுள்ளதாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த இலவச சேவையில் ஏறகனவே செயற்கை அவயங்கள் உள்ளவர்களும் தமக்குப் பொருத்தமான இன்னொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தவிர போலியோ நோயினால் அவயவங்கள் பாதிக்கப்பட்டவர்களும் தமக்குத் தேவையான உபகரணங்களைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மகளிருக்கு எதிரான உரிமை மீறல் தடுப்பது குறித்து கலந்துரையாடல்

மகளிர் அபிவிருத்தி அமைச்சின் ஒழுங்குபடுத்தலில் நல்லூர்ப் பிரதேச மாதர் சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவினர் நேற்று முற்பகல் யாழ். பொலிஸ் நிலையம் மற்றும் யாழ். நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு விஜயம் செய்து மகளிருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் உரிமை மீறல் தொடர்பாகவும் அவை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், தயாபரி கிரிதரன் தலைமையிலான இக் குழுவினர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கும் யாழ். நீதவான் நீதிமன்றத்திற்கும் விஜயம் செய்துள்ளனர்.

பெருமளவான மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் இவ் விஜயத்தில் கலந்துகொண்டனர். மகளிர் தமக்கு எதிராக இடமபெறும் உரிமை மீறல் நடவடிக்கைகள் மற்றும் அதற்கு எதிரான நடவடிக்கை குறித்தும் சம்பந்தப் அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டனர். இதன் மூலமா மகளிருக்கு மேற்கொள்ளப்படும் உரிமை மீறல் நடவடிக்கை களை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் எடுத்துச்சென்று நீதியைப் பெற்றுக் கொள்ளும் வகையிலாக இந்தச் செயற்பாடு அமைந்துள்ளது. (பா)

# இளைஞர்கள் அட்டகாசம் பாசையூரில் பதட்டம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழு பாசையூர் அந்தோனியார் கோயிலடியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைத் தாக்கிச் சேதப்படுத்தியது. நேற்று இரவு 7.30 மணியளவில் 7 மோட்டார் சைக்கிளில் கத்தி, தடிகளுடன் வந்த இளைஞர் குழுவே தாக்கியதாகப் பிரதேச மக்கள தெரிவிக்கின்றனர்.

இந்தவேளை குறிப்பிட்ட பிரதேசவாசிகள் கூச்சலிட அவ் இளைஞர் அணி அவ்விடத்தைவிட்டு அகன்றது. மேலும் இச்சம்பவத்தால் ஏற்பட்ட பதட்டத்தைத் தடுக்க பொலிஸார் வீதிகளில் நின்ற மக்களை வீடுகளுக்குள் செல்லுமாறு பணித்தனர்.

அதேவேளை கடந்த வியாழக்கிழமை மேற்படி பிரதேசத்தில் இரண்டு குழுக்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு மோதிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (21)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று காலை 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

காலை ஆரம்பமாகும் இந் நிகழ்வு தொடர்ச்சியாக எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை ஆஞ்சனேய அபிஷேகத்துடன் நிறைவுபெறும். எதிர்வரும் புதன்கிழமை காலை 10.00 மணிக்குத் தேர்த்திருவிழாவும், அதனைத் தொடர்ந்து வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (எப்.எஸ்)

# ஐ.நா. செயலரின் விமர்சனம் இலங்கைத் தூதுவர் அதிருப்தி

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 26 ஆவது கூட்டத் தொடருக்கு ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையை அனுப்பி வைத்தமை மற்றும் இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் பான் கீ மூன் விமர்சனங்கள் வெளியிட்டுள்ளமை தொடர்பில் ஜெனீவாவிற்கான இலங்கை தூதுவர் தமரா குணநாயகம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படும் முன்பே அதன் நம்பகத்தன்மை குறித்து ஐ.நா செயலாளர் நாயகம் கருத்து வெளியிட்டுள்ளமையை அவர் கண்டித்துள்ளார்.

மேலும் நிபுணர் குழு அறிக்கையை மனித உரிமை சபைக்கு அனுப்பிவைத்தமை பான் கீ மூனின் பொருத்தமற்ற ஒழுக்கமற்ற செயல் என விமர்சித்துள்ளார். மனித உரிமை சபையில் பாரதூரமான முடிவுகள் எடுக்கப்பட்டால் அது எதிர்காலத்திற்கு ஒரு மோசமான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என சர்வதேச நாடுகளின் தூதுவர்களிடம் தான் விளக்கமளித்துள்ளதாக தமரா குணநாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாதிக்கப்பட்ட தமிழ்...

தென்னாபிரிக்காவுக்குச் தப்பிச்சென்று அங்கு வசிக்கிறார். தனது கணவர் மற்றும் சகோதரர் சூசையின் சார்பில் அவர் தமிழ் மக்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும். அவர்கள் சொந்த தமிழ் மக்களிடமிருந்து கொள்ளைடியத்த பணத்தில் வாழ்ந்தார்கள். இப்போது அவருக்கு பணம் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது போலும். இப்போது பணம திரட்டுவதற்காக என்னை எதிர்க்கிறார்.

அவரின் கணவர் அரந்தலாவியில் மத குருக்களின் கொலை மற்றும் 600 பொலிஸார் கொல்லப்பட்டமைக்கு பொறுப்பான நன்கு அறியப்பட்ட பயங்கரவாதி என சவேந்திர சில்வா மேலும் கூறினார்.

## தமிழர் அபிலாசையை...

தேவையில்லை. எனினும் தீர்வுத் திட்டமொன்று அவசியம். அது உள்ளூர் ரீதியான தீர்வாகவோ அல்லது வெளிநாடு ஒன்றின் தலையீட்டுடன் கூடிய தீர்வாகவோ இருக்கக்கூடும். எனினும் நீண்ட காலமாக நிலவிவரும் பிரச்சினைக்கு தீர்வுத்திட்டமொன்றை முன் வைக்கவேண்டியது இன்றியமையாதது. பூனை கறுப்பாக இருந்தாலும் வெள்ளையாக இருந்தாலும் எலிகளை பிடிக்கவேண்டும் என்பதே முக்கியமானது என்ற சீனத் தலைவர் டெங்ஸியாம்பொங்கின் கருத்தை ராம் உதாரணம் காட்டியுள்ளார்.

சிங்கள அரசியல்வாதிகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான புதிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கிற்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மூன்று வெவ்வேறு விபத்தில் மூவர் காயமடைந்தனர்

யாழ்.குடாநாட்டில் நேற்றைய தினம் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் பகுதியில் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற துவிச்சக்கர வண்டி விபத்தில் அப்பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் திலக்ஷன் (வயது-15) என்ற மாணவன் காலில் காயமடைந்துள்ளான். புங்குடுதீவு பகுதியில் மரம் ஒன்றில் இருந்து விழுந்து மாணவன் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்வம் நேற்றுக்காலை 7.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த நிசாந்தன் (வயது-12) என்பவரே இடது கை முறிந்து காயமடைந்தவராவார்.

இதேவேளை, அராலிப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் இரவு 7.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இந்த நபர் வீடொன்றுக்கு பயணம் செய்கையில் வீதியில் கிடந்த கல்லில் மோட்டார் சைக்கிள் மோதுண்டதினாலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த வசந்தன் (வயது-26) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். எப்.எஸ்)

## அமெரிக்கா...

ஆயினும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அமெரிக்க விஜயத்தின் நிகழ்ச்சி நிரலை மாற்றியமைக்காமல், அங்கேயே தங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## நிபுணர்குழு...

துரிதப்படுத்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்த முன்னேற்றங்கள் குறித்து பான் கீ மூன் திருப்தியடைந்துள்ளார். கடந்த 2010 ஆம் ஆண்டு இருவரும் சந்தித்தபோது, ஐ.நா. வின் நிபுணர் குழுவானது விசாரணைக் குழுவாக அல்லாமல் ஆலோசனைக் கூறுவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளதென பான் கீ மூன் உறுதியளித்திருந்ததை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நினைவுபடுத்தினார். 2010 ஆம் ஆண்டு கூட்டத்தின் போதான குறிப்பை இலங்கைக் குழுவினர் அப்படியே வாசித்துக் காட்டினர். வழங்கப்பட்டவாக் குறுதியானது நிபுணர் குழுவினால் மதிக்கப்படவில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

நியூயோர்க்கிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறிவிக்கப்படாமல் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையானது மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதி புகார் தெரிவித்தார். இது தொடர்பான ராஜதந்திரசம் பிரதாயம் மீறப்பட்டமை குறித்து ஜனாதிபதி அதிருப்தி தெரிவித்ததுடன் இது ஐ.நா. முறைமை மீதான நம்பகத்தன்மையை தாழ்த்துகிறது எனவும் கூறியுள்ளார்.


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அவசரகாலம் சட்டமூலம் தொடர்பாக பான் கீ மூன் கேள்வி எழுப்பியபோது, அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டதாக குறிப்பிட்ட ஜனாதிபதி ஆயினும், விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுப்பதைத் தடுக்கும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளதாக பதிலளித்துள்ளார்.

அத்துடன், போர் முடிவுக்குள் வந்து இரு வருடங்கள் கழிந்துவிட்ட பின்னரும் வடபகுதியில் படைத்தரப்பினர் அதிகளவில் நிலைகொண்டிருப்பது குறித்தும் மகிந்த ராஜபக்ஷிடம் பான் கீ மூன் கேள்வி எழுப்பியுள்ளார். இக் கேள்விக்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, வடபகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே படைத்தரப்பினர் அங்கு நிலைகொண்டுள்ளதாகவும், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் படைத்தரப் பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை, வடபகுதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு தொழிலாளர்கள் பற்றாக் குறையாக இருப்பதாலேயே, படைத்தரப்பினரை அப்பணிகளில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். அத்துடன், போரின்போது இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் குறித்தும் பான் கீ மூனிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுத்துக் கூறியுள்ளார்.


## செய்திப்பாணம்

**இராஜதந் திரப்போரே இப்பொழுது நடப்பதாம்**
**அராஜக யுத்தங்கள் அல்லவாம் - புராதன**
**கதையளக் கிறார்மாவை கடுமையா இதைவெல்ல**
**உதைவாங்க உசுப்பேத்தும் உரை!**



# சிங்களக் குடியேற்றங்களை தடுப்பது குறித்து ஆராய்வு

## என்கிறார் செல்வம் எம்.பி.



(கொழும்பு)

வடக்கில் அரசினால் மேற் கொள்ளப்பட்டு வரும் திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றம் மற் றும் நில அபகரிப்பு ஆகியவற்றை எவ்வாறு தடுத்த நிறுத்துவதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராயவுள்ளதென கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பின ரும், ரெலோ இயக்கத்தின் தலை வருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,


முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் மட்டு மல்ல, சிங்களப்பிரதேச பிரிவுக ளும் அமைக்கப்பட்டு அரசாங்கம் எம்முடன் பேச்சுக்களை முன்னெ டுக்கும் அதேவேளை, சில நகர் வுகளையும்,முன்னெடுத்துச் செல் கின்றது. இவ்வாறான செயற் பாடுகள் அரசின் நேர்மையற்ற தன்மையினை வெளிச்சம் போட் டுக் காட்டுகின்றது.

தமிழர் தாயகப் பிரதேசங்க ளில் சிங்களக் குடியேற்றங்களை அனுமதிக்க முடியாது எனவும், அரசு திட்டமிட்டு இன ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத் துச் செல்கின்றது. எனவே இதனை தாம் வன்மையாகக் கண்டிப்ப தாகவும் அவர் தெரிவித்தார்.

# ஹெய்ட்டியிலுள்ள இராணுவத்தினர் நன்னடத்தையில் ஈடுபட்டுள்ளனர்

## இராணுவத் தளபதி கூறுகின்றார்

(கொழும்பு)



ஐ.நா.அமைதிகாக்கும் படைக்காக ஹெய்ட் டியில் பணிபுரியும் இலங்கை இராணுவ வீரர்கள் நன்னடத்தையில் நாட்டுக்காக நற் பெயரை பெற்றுக்கொடுத்திருப்பதாக இரா ணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜய சூரிய தெரிவித்துள்ளார்.

லெபனானில் உள்ள இலங்கை வீரர்களும் அதேபோன்று ஒழுக்கம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு லெபனான் சென் றுள்ள அவர் அங்கு பணிபுரியும் இலங்கை இராணுவ வீரர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து உரையாடியபோதே இவ் வேண்டு கோளை முன்வைத்துள்ளார்.

லெபனானிலுள்ள இலங்கை வீரர்களின் நலன் மற்றும் அவர்க ளுக்குரிய பணி குறித்து இராணுவத் தளபதி விரிவாக கலந்துரை யாடியதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது

# வீரவில ஆயுதக் களஞ்சிய வெடிப்பு

## இரண்டு இராணுவத்தினர் காயம்

அம்பாந்தோட்டை மாவட்டத்தி லுள்ள வீரவில படைமுகாமின் ஆயுதக் கிடங்கில் நேற்றுப் பிற் பகல் 3.45 மணியளவில் வெடிப் புச் சம்பவமொன்று இடம்பெற் றுள்ளது.

வீரவில இராணுவ முகாமில் தோட்டாக்களை களஞ்சியப்ப டுத்தி வைத்திருந்த களஞ்சிய சாலையிலேயே இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதாகவும், இதில் இரண்டு இராணுவ வீரர் கள் காயமடைந்தாகவும் தெரி விக்கப்படுகிறது.

காயமடைந்த இரண்டு இரா ணுவ வீரர்களும் திஸ்ஸமஹராம வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் உயர திகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அவர்கள் இருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருப் பதாக திஸ்ஸமஹராம வைத்தி யசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் எம்.என். எச். கிரிஷாந்த குறிப்பிட்டார்.

# யாழிற்கான தனியார் பேருந்துகள் பம்பலப்பிட்டியிலிருந்து புறப்படும்

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்



(கொழும்பு)

கொழும்பில் இருந்து யாழ்ப் பாணத்துக்கு செல்லும் பயணி கள் பேருந்துகள் அனைத்தும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பம்பலப்பிட்டி ரயில் நிலையத் துக்கு அருகில் இருந்து புறப்ப டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து உரிமையா ளர்கள் நேற்று முற்பகல் ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் வெள்ள வத்தை கடற்கரை வீதியில் இரு ந்து புறப்பட்ட தனியார் பேருந் துகள் பம்பலப்பிட்டியில் இருந்து புறப்படுவதற்கான அனுமதியை பொலிஸார் தற்காலிக மாக வழங்கியுள்ளதாக பேருந்து உரிமையாளர் கள் கூறினர்.

எதிர்காலத்தில் புறக் கோட்டையில் இருந்து பேருந்துகள் புறப்பட வேண்டும் எனவும் அல் லது பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத இடம் ஒன்றில் இருந்து பேருந் துகள் பயணிக்க வேண்டும் என் றும் போகுவரத்து பொலிஸார் உத்தரவிட்டதாக பேருந்து உரி மையாளர்கள் குறிப்பிட்டனர்.

வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சேவை யில் ஈடுபடும் தனியார் பேருந் துகள் எதுவும் புறப்படக்கூடாது என வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பொலிஸார் கூறியிருந்தனர்.

இந்நிலையில், நேற்று முற் பகல் இடம்பெற்ற கூட்டத்தில் பம்பலப்பிட்டியில் இருந்து புறப் படுவது என தற்காலிகமாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து ஏ-9 வீயில் சேவையில் ஈடுபடுவதற் கான அனுமதிப்பத்திரம் இல் லாத பேருந்துகள் அனைத்தும் சேவையில் ஈடுபட முடியாது என போக்குவரத்து பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

அவ்வாறு சேவையில் ஈடு படும் பேருந்துகள் பறிமுதல் செய்யப்படுவதுடன், பேருந்து உரிமையாளர்கள் ஐந்து இலட் சம் ரூபா குற்றப்பணம் செலுத்த வேண்டும் எனவும், சாரதிகளுக்கு மூன்று இலட்சம் வரை குற்றப் பணம் அறவிடப்படும் என்றும் போக்குவரத்து பொலிஸார் கூறி யுள்ளனர்.

# போர் வெற்றி அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தயார்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத்தயார் என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகளுக்கு எதிரான வெற்றியின் ஒரு கட்டமாகவே அண்மையில் இலங்கை - இந்திய கடற்படையினருடன் கூட்டுப்பயிற்சிகள் நடத் தப்பட்டன. இறுதிக்கட்ட போரின்போது கடறபடையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை இந்திய கடற்படைத் தளபதி வியந்து பாராட் டினார். உலகின் முதனிலையான கடற்படைகளில் ஒன்றான இலங் கைக் கடற்படைக்கு தலைமை தாங்குவது பெருமிதம அளிக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

# கப்பல் மூலம் கனடா சென்றவர்களில் இருவர் விடுதலைப் புலி உறுப்பினர்கள்

## அமெரிக்க தீவிரவாத தடுப்பு பிரிவு தகவல்

(கொழும்பு)

கனடாவுக்கு கப்பல் மூலம் சென்ற இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களில் விடுத லைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரு சந்தேக நபர்கள் காணப்படுவதாக கனடா அதிகா ரிகளுக்கு தெரியப்படுத்தியுள் ளதாக அமெரிக்க தீவிரவாத தடுப்பு பிரிவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடங்களின் முன்பு ஓஷியன் லேடி கப்பல் மூலம் கனடாவுக்குச் சென்ற 76 இலங் கையர்களின் கைவிரல் அடையா ளங்கள் அமெரிக்க பாதுகாப்பு துறையினரால் பரிசோதிக்கப் பட்டபோதே இந்த இருவரும் இனங்காணப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

தகவல் கோர்ப்பின் அடிப் படையில் ஆராய்ந்து பார்த்த போது இவ்விருவரும் விடுத லைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் என அடையாளம் காணப்பட்டதாக அமெரிக்க தீவிரவாத தடுப்பு பிரிவின் ஒருங்கிணைப்பாளர் ஜோன் கோஹன் தெரிவித்துள் ளார்.

அத்துடன், கனேடிய எல் லைப் பாதுகாப்பு அதிகாரிகள் ஒட்டாவாவில் உள்ள அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமு லாக்க அதிகாரிகளுடன் இணை ந்து கைவிரல் அடையாளங்க ளைப் பயன்படுத்தி குறித்த இரு சந்தேக நபர்களையும் கண்டுபி டித்துள்ளனர்.

இவ்விருவரும் 2008ஆம் ஆண்டு அமெரிக்க நுழைவு அனுமதிக்கு விண்ணப்பித்திருந் ததாகவும், அதன்போது இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என அடையாளப் படுத்தப்பட்டிருந்ததாகவும் அமெ ரிக்க பாதுகாப்பு துறையினரால் கனேடிய எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

குறித்த தகவல் அமெரிக்க பாதுகாப்பு துறையினருக்கும் கனேடிய எல்லைப் பாதுகாப்பின ருக்கும் இடையில் மேற்கொள் ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே வழங்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இச்சம்பவமா னது நாடுகளுக்கிடையிலான தக வல் பரிமாற்றத்தின் முக்கியத்து வத்தை எடுத்துக் காட்டுவதாக அமெரிக்க தீவரவாத தடுப்பு பிரி வின் ஒருங்கிணைப்பாளர் ஜோன் கோஹன் தெரிவித்துள்ளார்.

# சட்டத்தரணிகளின் பணிப் புறக்கணிப்பு நாளை மறுதினம் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதிமன்றில் இடம்பெற்று வரும் சட்டத்தரணி களின் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் நாளை மறுதினம் வியாழக்கிழமை சட்டத்தரணிகள் கூடிக் கலந்தாலோசிக்க உள்ள னர்.

குறித்த சம்பவத்தில் தொடர் புடைய ஒரு தமிழ்ப் பொலிஸார் உட்பட ஏழு பொலிஸார் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் அவர்களை நாளை புதன்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள் ளதாக வும் பொலிஸ் தரப்பில் தெரிவிக் கப்பட்ட நிலையில், இக் கலந்து ரையாடல் இடம்பெறவுள்ளது.

பொலிஸ் தரப்பில் கூறப்பட் டவாறு, ஏழு பேரும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப் பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் பட்சத்தில் பணிப் புறக் கணிப்பு தொடர்பில் சட்டத்தர ணிகளால் தமது நடவடிக்கை கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பதற்காகவே வியாழக் கிழமை இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தெரியவ ருக்கின்றது.

யாழ்நீதிமன்றத்திற்குள் வைத்து கைதி ஒருவர் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்ப வத்தை அடுத்துதமது வழக் காடுத் தொழிலை பதில் பகிஷ் கரிக்கும் யாழ். சட்டத்தரணிகள் நாளை மறுதினம் வியாழக் கிழமை கூடித் தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மா னிக்கப்படவுள்ளதாக யாழ். சடடத் தரணிகள் சார்பில் பேச வல்ல அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் சம்பந்தப் பட்ட ஒரு பொலிஸாரும் இடை நிறுத்தப்பட்டிருப்பதுடன் நாளை புதன்கிழமை யாழ்.நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள் ளதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வாறு பொலிஸார் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டு அவர் களுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்ட தன் பின்னர் அதனைப் பார்த்து மறு நாள் வியாழக்கிழமை சட்டத்தர ணிகள் கூடித் தமது நடவடிக்கை குறித்து அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வர்களில் தமிழ் பொலிஸார் ஒரு வரும் அடங்குவதாகவும் அவர் கள் கோப்பாய் பொலிஸார் என வும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## சம்பியன்ஸ் லீக் ருவென்ரி -20

**மும்பாய் இந்தியன்ஸ் எதிர் ட்ரினடாட்**



ட்ரினடாட் 98 (16.2 ஓவர்கள்) மும்பை இந்தியன்ஸ் 99/9 (20 ஓவர்கள்) ஒரு விக்கெட்டால் மும்பை இந்தியன்ஸ் வெற்றி.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.